வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 25.06.2025 புதன்கிழமை | இதழ் : 176 | பக்கங்கள் : 12




# ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்!



யாழ்ப்பாணம், ஜூன் 25

**ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். இதன்போது, அவர் செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிடுவதுடன், அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களையும் சந்திப்பார் என்று அறியவருகிறது.**

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் 4 நாட்கள் பயணமாக நாட்டுக்கு வருகை தந்துள்ளார். நேற்றைய தினம் கொழும்பில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடிய அவர் இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் வருகிறார்.

தரைவழியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியை பார்வையிடுவார். அத்துடன், போராட்டக்காரர்களையும் சந்தித்துப் பேசுவார் என்று அறிய வருகிறது.

இதன் பின்னர், தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தெரிவு செய்யப்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் அரச உயரதிகாரிகளையும் அவர் சந்தித்து பேசவுள்ளார் என்றும் அறிய வருகிறது.

எனினும், ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் யாழ்ப்பாண வருகைக்கான நிகழ்ச்சி நிரல் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதுடன், அவரின் வருகைக்கான முழு ஏற்பாடுகளையும் ஐ. நா. வதிவிட பிரதிநிதி பணிமனையே மேற்கொண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் இன்றைய தினம் கண்டி, திருகோணமலை பயணத்தை முடித்துக் கொண்டே யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

11



அரசின் தமிழின படுகொலை:

## சர்வதேச விசாரணைக்கு வழி செய்ய வேண்டும்!

வோல்கர் டர்க்கிடம் சிறீதரன் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 25

“தமிழ் மக்கள்மீது இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொண்ட இனப் படுகொலை, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் வகையில் சர்வதேச விசாரணைக்கு வழி செய்ய வேண்டும்” - இவ்வாறு ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம் கோரிக்கை விடுத்துள்ளார் இலங்கை தமிழ் அரசு கட்சியின் சிறீதரன் எம்.பி.

நேற்றைய தினம் பாராளுமன்றில் நடந்த கட்சி

11

## தீயில் எரிந்து முதியவர் பலி!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூன் 25

எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியில் ஆடை பட்டதால் பரவிய தீயில் எரியுண்டு முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

அராலி தெற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அம்பலவாணர் நாகேந்திரம் (வயது 69)

11

## செம்மணி புதைகுழிக்கு நீதி கோரி இன்று மனித சங்கிலி போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரிய போராட்டத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளன.

இன்றைய தினம் முற்பகல் 10.10 மணிக்கு போராட்டம் நடைபெறும் செம்மணி வளைவு அருகே அக வணக்கம், மலர் அஞ்சலி செலுத்தப்படும்.

தொடர்ந்து, நண்பகல் 12 மணிக்கு மனிதப் புதைகுழி கண்டறியப்பட்ட சித்துப்பாத்தி மயானத்திலிருந்து போராட்டம் ஆரம்பமாகும். அங்கிருந்து, செம்மணி வீதி வழியாக மனித சங்கிலி முறைமையில் ஐ. நா. வதிவிட பிரதிநிதியின் பணிமனை வரையில் போராட்டம் நடைபெறும். அங்கு, போராட்டக்காரர்களால் மனு கையளிக்கப்படும்.

11

## மன்னார் நகர சபை ஐ.த.தே. கூட்டணி வசம்

தேசிய மக்கள் சக்தியும் ஆதரவு

மன்னார், ஜூன் 25

மன்னார் நகர சபையின் அதிகாரத்தை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி கைப்பற்றியுள்ளது. தவிசாளராக டானியல் வசந்தன், உபதவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நூர் முகமது உசைன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

16 உறுப்பினர்களை கொண்ட மன்னார் நகர சபையின் அதிகார பதவிகளுக்கான தெரிவு நேற்று செவ்வாய்க்கிழமை வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

11

## நல்லிணக்க முயற்சி குறித்து ஆணையரிடம் விளக்கினேன்

வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஜூன் 25

“தொடர்ச்சியான ஆக்கபூர்வமான ஈடுபாட்டுக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை நான் மீண்டும் வலியுறுத்தினேன். புதிய அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து நல்லிணக்க முயற்சிகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான முன்னேற்றம் தொடர்பிலும் மனித உரிமைகள் ஆணையாளரிடம் விளக்கினேன்” - இவ்வாறு தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்.

11



## காணி உறுதிகளை கையிலேந்தி நேற்றும் மயிலிட்டியில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

“எமது நிலம் எமக்கு வேண்டும்”, என்று கோரி வலி. வடக்கு மக்கள் தமது காணி உறுதிகளை கைகளில் ஏந்தியபடி நேற்று 4ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலிட்டியில் நடைபெற்று வரும் இந்தத் தொடர் போராட்டத்தில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் நேற்றைய தினமும் பங்கேற்றனர்.

தமது சொந்த இடங்களிலிருந்து 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகிறோம். எமது காணிகளை எம்மிடம் தாருங்கள் என்று வலியுறுத்திய போராட்டக்

11

## மாந்தை மேற்கு சபை; ஐ.த.தே. கூட்டணியிடம்

மன்னார், ஜூன் 25

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளராக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஞானப்பிரகாசம் பிறேம்குமார் தெரிவாகியுள்ளார்.

21 உறுப்பினர்களைக்கொண்ட மாந்தை மேற்கு பிரதேச சபையின் அதிகார பதவிகளுக்கான தெரிவு நேற்று வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்கு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்ட ணியின் ஞா. பிறேம்குமார், இலங்கை

11

போதைப்பொருள் ஒழிப்பு:

## விழிப்புணர்வு நடவடிக்கை நாளை ஆரம்பமாகும்

கொழும்பு, ஜூன் 25

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் நாளை வியாழக்கிழமை முதல் விசேட நடவடிக்கை ஆரம்பமாகும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையால் சமூகத்திலும் குடும்பங்களிலும் பல பிரச்னைகள் ஏற்படுகின்றன.

11

## மன்னார் பிரதேச சபை அ.இ.ம. காங்கிரஸ் வசம்!

மன்னார், ஜூன் 25

மன்னார் பிரதேச சபையின் தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஏ. ஜே. எம். ஜப்ரான் தெரிவாகியுள்ளார்.

22 உறுப்பினர்களைக்கொண்ட மன்னார் பிரதேச சபையின் அதிகார பதவிகளுக்கான தெரிவு நேற்று வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.


தவிசாளர் பதவிக்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் கிறிஸ்ரி றெவல், அகில இலங்கை

11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட அரச அதிபராக பிரதீபன் கடமைகளை ஏற்றார்



யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபராக மருதலிங்கம் பிரதீபன் நேற்று செவ்வாய்க் கிழமை சம்பிரதாயபூர்வமாக கடமையேற்றார். இதன்போது, அவருக்கு சக ஊழியர்களால் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேலதிக அரச அதிபர் சிறீமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்த பதவியேற்பு நிகழ்வில் மதத் தலைவர்கள், மாவட்ட செயலக ஊழியர்கள், பிரதேச செயலர்கள் மற்றும் பல்வேறு திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர்.

முன்னதாக, அரச அதிபர் பிரதீபன் தனது குடும்பத்தினர் சகிதம் வருகை தந்தார். இதன்போது, அவர்கள் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து அரச அதிபராக பிரதீபன் சம்பிரதாய பூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றார்.

யாழ். மாவட்ட அரச அதிபர் பதவிக்கு பல மாதங்களாக வெற்றிடம் நிலவியது. இந்த நிலையில், பதில் அரச அதிபராக ம. பிரதீபன் கடமையாற்றி வந்தார். இந்த நிலையில், அவரை அரச அதிபராக கடந்த 20ஆம் திகதி அமைச்சரவை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருநெல்வேலியில் உணவகத்துக்கு சீல்



யாழ்ப்பாணம், ஜூன் 25

சுகாதார சீர்கேட்டுடன் திருநெல்வேலியில் இயங்கிய உணவகம் ஒன்று நீதிமன்ற உத்தரவின்படி சீல் வைக்கப்பட்டது.

திருநெல்வேலி பகுதியில் உள்ள பலசரக்கு கடைகள், உணவகங்கள் பொது பரிசோதகர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது, பலசரக்கு கடை ஒன்றில் இருந்து, காலாவதியான பொருட்கள் பல அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. இதேபோன்று, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றும் கண்டறியப்பட்டது.

இந்த நிலையங்கள்மீது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. நேற்று முன்தினம் இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டன. கடைகளின் உரிமையாளர்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டனர்.

இதையடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த நீதிவான், பலசரக்கு கடை உரிமையாளருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்தார். அத்துடன், உணவ உரிமையாளருக்கு 90 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன், சீர்கேடுகளை சரி செய்யும் வரை உணவகத்தை சீல் வைக்கவும் உத்தரவிட்டார். (ஐ)

# ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடக்கில் முதலீட்டு சூழல்!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஆட்சி மாற்றத்தின் பின்னர் முதலீடுகளுக்கான சாதகமான சூழல் வடக்கில் உருவாகி வருகிறது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

ஐ. நா.வின் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் (யுனிடோ) ஏற்பாட்டில் வடக்கு மாகாண சபை பணியாளர்களுக்கான, 'தர முகாமைத்துவம்: கருத்துகளிலிருந்து சான்றிதழ் வரை' என்னும் தலைப்பிலான பயிற்சிப்பட்டறை நேற்று நடைபெற்றது.

பயிற்சிப்பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் முதலீடுகளுக்கான சாதகமான சூழல் வடக்கில் உருவாகி வருகிறது. முதலீட்டாளர்கள் இங்கு முதலிடும்போது அவர்களுக்குரிய தொழில் படையை - மனிதவளத்தை தயார்படுத்த வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கிறது.

அதற்கான பணிகளையும் நாங்கள் முன்னெடுக்கவேண்டும். அதேவேளை ஏற்றுமதியை நோக்கியை தயார் படுத்தலும் எங்களுக்குத் தேவை - என்றார்.

# செட்டிகுளம் பிரதேச சபையில் எமது கூட்டு ஆட்சி அமையும்!

## தமிழ் அரசு கட்சி அறிவிப்பு

வவுனியா, ஜூன் 25

வவுனியா வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஆட்சியமைப்பதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

செட்டிகுளம் பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் தெரிவு இன்றைய தினம் நடைபெறவுள்ளது. இந்தநிலையில், இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் வவுனியா பணிமனையில் நேற்று நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ஐக்கிய மக்கள் சக்தி), இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகளிடையே ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் செட்டிகுளம் பிரதேச ச்பையில் ஆட்சி அமைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெத்துள்ளோம்.

இதற்கு அமைவாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர் தவிசாளராக பிரேரிக்கப்படுவார். உப தவிசாளராக தமிழ் அரசு கட்சியைச் சேர்ந்தவர் முன்மொழியப்படுவார். இதன்படி, செட்டிகுளம் பிரதேச சபையின் ஆட்சியை எமது கூட்டு நிச்சயம் கைப்பற்றும்.

வவுனியா வடக்கு பிரதேச சபையிலும் ஆட்சி அமைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெத்துள்ளோம். அந்த சபையின் தவிசாளர் யார் என்பது தொடர்பில் பல கருத்துகள் உள்ளன. அது தொடர்பில் ஆராய்ந்து பொருத்தமான முடிவு எடுப்போம் - என்றார். (ஐ)

# பாண்டியன்குளம் ம. வி. உடற்கல்வி ஆசிரியர் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

## மாணவர்கள், பெற்றோர் போராட்டம்

முல்லைத்தீவு, ஜூன் 25

முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளம் மகா வித்தியாலய உடற்கல்வி ஆசிரியரின் இட மாற்றத்தை இடைநிறுத்தக் கோரி பாடசாலை முன்றலில் பழைய மாணவர்கள், பெற்றோர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் போராட்டம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த பாடசாலை அதிபர் மாணவர்களை தாக்கியதை அடுத்து பெற்றோருக்கும் பாடசாலை சமூகத்துக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது.


இதனையடுத்து அங்கு பொலிஸார் வர வழைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் வலய கல்வி பணிமனையிலி ருந்து வருகை தந்த அதிகாரிகள் பெற்றோர், மாண வர்களுடன் கலந்துரையாடி தீர்வு பெற்று தருவதாகக் கூறி, மாணவர்களை பாடசாலைக்குள் செல்லுமாறு கூறியிருந்தனர். இதையடுத்து இந்தப் போராட்டம் நிறைவுக்கு வந்திருந்தது.

இதேவேளை, பெற்றோர்களுடன் ஆர்ப்பாட் டத்தில் கலந்துகொள்ள வந்த மாணவர்களை தாக்கிய அதிபர் மீது, பெற்றோரால் முறைப்பாடு ஒன்றும் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக பாடசாலையின் முறையற்ற நிர்வாகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வலய கல்வி பணிமனையில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையிலேயே இந்தப் போராட்டம் நடைபெற்றது. (அ)

# அராலி பேச்சியம்பாள் ஆலயத்தில் சிறப்பு நடந்தது வேட்டை திருவிழா!



யாழ்ப்பாணம், ஜூன் 25

அராலி மேற்கு பேச்சியம்பாள் ஆலய வருடாந்த அலங்கார வேள்வி திருவிழாவின் 7ஆவது நாளான நேற்று முன்தினம் வேட்டைத் திருவிழா சிறப்புற நடைபெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் பேச்சியம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து வசந்த மண்டப பூசைகள் நடைபெற்றன. பின்னர் பேச்சியம்பாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளி மங்கல வாத்தியங்கள் முழங்க, பொம்மலாட்டங்களுடன் அராலி மத்தி பேச்சியம்பாள் ஆலயத்தை சென்றடைந்தார். அங்கு வேட்டை நடைபெற்று பின்னர், பக்தர்கள் புடைசூழ அங்கிருந்து மீண்டும் இருப்பிடத்தை வந்தடைந்தார்.

ஆலயத்தின் வேட்டைத் திருவிழா கிரியைகளை துஷ்யந்த குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்தினர். இந்த திருவிழாவில் ஏராளமான வர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 17ஆம் திகதி ஆரம்பமான இந்தத் திருவிழா இன்றைய தினம் வேள்வி திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

# வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம்!

வடமராட்சி, ஜூன் 25

வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று காலை 9 மணிக்கு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்திக் குழு தலைவருமான க. இளங்குமரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் பிரதேச அபிவிருத்தி சார்ந்து பல்வேறு விடயங்கள் மக்களால் முன்வைக்கப்பட்டன. அத்துடன், அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், கூட்டத்தில் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.06.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எது தேசம் - யார் திரட்டுவது?

தமிழ் மக்கள் ஒரு தேசம் - அவர்களை தேசமாக திரட்டுவதுதான் தமிழ் கட்சிகளின் இலக்காக இருக்க வேண்டும் என்னும் கோஷம் அவ்வப்போது தமிழர் அரசியல் பரப்பில் எட்டிப் பார்ப்பதுண்டு. கருத்துருவாக்கிகளாகத் தங்களை அடையாளப்படுத்துபவர்கள், சிவில் சமூக அமைப்புகளாக தங்களை அடையாளப்படுத்துபவர்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்பாக தங்களை அடையாளப்படுத்துவோர் என அனைவருமே இந்த சுலோகத்தை அவ்வப்போது தங்களுக்கு வசதியான தருணங்களில் உயர்த்திப் பிடிப்பதுண்டு.

மனித புதைகுழி விவகாரத்தை முன்வைத்து அணையா விளக்கு என்னும் பதாதையின் கீழ் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. நீதிக்கான போராட்டங்களை எவர் முன்னெடுத்தாலும் அதில் நியாயமுண்டு. அந்த வகையில் ஈழநாடு பாதிக்கப்பட்ட மக்களுடன் நிற்கிறது. ஆனால், பாதிக்கப்பட்ட மக்களின பெயரால் தேசமாக திரளுமாறு அறிக்கைகள் வெளியிடும் அரசியல்வாதிகள், அமைப்புகளின் போலித்தனமான செயல்பாடுகளை கண்டும் காணாமல் விடமுடியாது. உண்மையில், சமூகப் பொறுப்பின் அடிப்படையில் அவ்வாறான செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கவை.

யாழ். பல்கலைக்கழ மாணவர் அமைப்பு தேசமாக திரளுமாறு மக்களுக்கு அழைப்பு விட்டிருக்கிறது - இவ்வாறான அறிக்கைகள் குறித்த அமைப்பின் கடிதத் தலைப்புடன் அவ்வப்போது வெளிவருவதுண்டு. ஆனால், குறித்த அறிக்கையை வெளியிடும் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு ஆகக்குறைந்தது தங்களுடைய மாணவர் அமைப்பின் உறுப்பினர்களைக்கூட அணி திரட்டியதில்லை. மக்களை தேசமாகத் திரளுமாறு கூறுபவர்கள் முதலில் தங்களை ஒரு தேசமாகக் காண்பிக்க வேண்டும். ஏனெனில், அறிக்கைகளை வெளியிடும் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் போராட்டத்தில் பங்கு கொண்டாலே பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டத்தில் பங்குகொண்டிருக்க முடியும். ஆனால், போராட்டம் என்னும் பெயரில் இடம்பெறும் எதிர்ப்பு நடவடிக்கைகளிலோ விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே கூடிக்கலைகின்றனர். அதிலும், குறிப்பாக பங்குபற்றுபவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் வயதானவர்கள்.

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகளின் பிரமுகர்களே அதிகம் பங்குபற்றுகின்றனர். 2009இற்கு பின்னரான தமிழர் போராட்டம் என்பது அரசியல்வாதிகள் ஒன்றுகூடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் போன்றே காட்சியளிக்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் யாழ். பலகலைக்கழக மாணவர்கள் பங்கு கொள்வதில்லை. ஆனால், அவர்களின் பெயரில் அவ்வப்போது அறிக்கைகள் மட்டும் வெளிவருகின்றன. நீங்கள் கூறுவதற்கு நீங்களே உண்மையாக இல்லாதபோது உங்களுடைய அறிவுரைகளை மற்றவர்கள் கேட்பார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ஆயுத விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நாட்களில் யாழ். பல்கலைக் கழகத்துக்கு ஒரு தனித்துவமான பங்களிப்பு இருந்தது உண்மை. அன்றைய சூழலில் யாழ். பல்கலைக்கழகம் ஆயுத இயக்கங்களின் தலைவர்களின் மறைவிடமாகக்கூட இருந்திருக்கிறது. அன்று பல்கலைக்கழக மாணவர்களாக இருந்த பலர் ஆயுத விடுதலைப் போராட்டத்தின் பிரதான செயல்பாட்டாளர்களாகவும் இருந்திருக்கின்றனர். அதேவேளை மக்கள் மத்தியில் அரசியல் உரையாடல்களை முன்னெடுக்கும் நிறுவனமாகவும்கூட பல்கலைக்கழகம் தொழில்பட்டிருக்கிறது. ஆனால், அது ஒரு காலம்.

இன்றைய சூழலில் யாழ். பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு என்பது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி விட்டது. இன்றைய சூழலில், யாழ். பல்கலைகழக மாணவர்களின் பங்களிப்பு என்பது வெறுமனே அறிக்கைகளுடன் முடிந்து விடுகிறது. 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் பல்கலைக்கழக மாணவர்கள் என்னும் பெயரில் முன்னெடுக்கப்பட்ட அனைத்து விடயங்களுமே சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்பது போலவே முடிவுற்றது. மற்றவர்களை நோக்கி தேசமாக திரளுங்கள் என்று கூறுவது சாதாரணமான ஒன்று. ஆனால், அதற்காக அர்ப்பணிப்புடன் பங்களிப்பதுதான் கடினமானது. அர்ப்பணிப்புக்கு தயாரற்ற சொற்கள் பயனற்றவை. செயலே சிறந்த சொல்.

## பசுமை அமைதி விருதுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

பசுமை அமைதி விருதுகள் - 2024 பரிசளிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் யோ. நந்தகோபன், சிறப்பு விருந்தினர்களாக விவசாய திணைக்கள வட மாகாண பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில் குமரன், நீர்ப்பாசன திணைக்கள வட மாகாண பணிப்பாளர் எந்திரி ச. சர்வராஜா ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

## 1,360 கிலோ பீடி இலைகள் மன்னாரில் சிக்கின

மன்னார், ஜூன் 25

1360 கிலோ பீடி இலைகளுடன் 29 ஆயிரத்து 120 பீடிகளையும் மன்னாரில் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

தலைமன்னார் நடுக்குடா கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் இவற்றை கடற்படையினர் கைப்பற்றினர்.

பீடி இலைகளும் பீடிகளும் சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து படகு மூலம் கடத்திவரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இது குறித்து கடற்படைக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே அவை கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருட்கள் மதுவரி திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை மன்னார் மதுவரி திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## யாழ். பல்கலைக்கழகத்தின் சட்ட துறையின் 20ஆண்டு பூர்த்தி ஞாயிறன்று சிறப்பு நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டுகள் பூர்த்தியை ஒட்டி சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.


எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ. எச். எம். டி. நவாஸ், கௌரவ விருந்தினராக சட்டத்தரணி மாலா சபாரத்தினம், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி பி. என். தம்பு கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் திருமதி கோசலை மதன் ஆகியோரும் பங்கேற்பர்.

நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை தொடர்பான ஆவணப்படமொன்று வெளியிடப்படவுள்ளது.

மேலும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய, இலங்கை சட்ட கல்லூரி அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்தலால் டி அல்வீஸ், சட்டத்தரணி எல். இளங்கோவன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, சட்டத்தரணி எர்மிசா டெகல், சட்டத்தரணி லக்ஸ்மனன் ஜெயகுமார் ஆகியோர் பங்கேற்கும் குழு விவாதம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி நிஸாந்தவின் நெறியாள்கையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## பாலம் அமைக்கும் பணி தாமதம் பொதுமக்களுக்கு பெரும் சிரமம்!



வவுனியா, ஜூன் 25

வவுனியா ஏ-9 வீதியில் பாலம் அமைக்கும் பணி தாமதமடைந்துள்ளமையால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.


வவுனியா மாநகர சபை மைதானம் முன்பாகவுள்ள பழைய பாலத்தை அகற்றி புதிய பாலம் அமைக்கும் பணி கடந்த ஏப்ரலில் முன்னெடுக்கப்பட்டது.

பணிகள் ஆரம்பமாகி இரண்டு மாதங்கள் கடக்கின்ற நிலையில் பாரம் இன்னமும் பூர்த்தியாகவில்லை. இதனால், இந்த வீதி வழியாக பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியை தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில், பாலம் அமைக்கும் பணி தொடர்ந்தும் தாமதமாகி வருவதால் தினமும் அந்தப் பகுதியில் நெருக்கடி காணப்படுகிறது.


எனவே குறித்த விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் -25 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 11
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி: அமாவாசை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உத விகள் கிடைக்கும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. பண விஷயத்தில் கறாராக இருங்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உறவினர் நண்பர்களில் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். முன்னேறும் நாள்.

**கடகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப் புணர்வுகளை பாராட்டுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். பிரபலங்கள் உதவுவார்கள்.மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். சாதிக்கும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களைகையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள்.


**தனுசு**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். அமோகமான நாள்.


**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நட்பு வட்டம் விரியும்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சொத்து வாங்குவது விற்பதுலாப கரமாக அமையும்.

# வவுனியா நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்





வவுனியா, ஜூன் 25

வரலாற்று சிறப்பு மிக்க வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் காலை முதல் நேற்றைதினம் அதிகாலை வரை சிறப்பாக நடைபெற்றது

நேற்று முன்தினம் காலை முதல் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதோடு இரவு வேளையில் நாக தம்பிரான் உள்வீதி வெளிவீதி வலம்வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்

நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தையொட்டி நாடு பூராக இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தந்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (எ)

# நீர்வேலியில் சிறப்புச்சொற்பொழிவு


யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி

கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 27ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் க. கைலநாதன் "அசுரர்தோற்று படலம்" என்னும் விடயப் பொருளில் நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து

நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.(எ)

# இனிப்புக்கடை போர்வையில் கஞ்சா விற்றவர் கைதானார்!



கிளிநொச்சி, ஜூன் 25

திருமுறிகண்டி பகுதியில் சூட்சுமமான முறையில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, இரணைமடு விமானப்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில், மாங்குளம் பொலிஸ் சிறப்புப் படை அதிகாரிகள், திருமுருகண்டி பகுதியில் இனிப்புக் கடை நடத்துவதாகக் கூறி, கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட நபரை கைது செய்ததுடன் 35 கிராம் கேரளக் கஞ்சாவை பறிமுதல் செய்து மேலதிக விசாரணைக்காக மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (எ)

# நெல் விளைச்சல் மதிப்பீடு விவசாய போதனாசிரியர்களுக்கு செயலமர்வு



கிளிநொச்சி, ஜூன் 25

தொகைமதிப்புப் புள்ளிவிவரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நெல் விளைச்சலை மதிப்பீடு செய்தல் தொடர்பில் விவசாய போதனாசிரியர்களுக்கான செயலமர்வு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 09. 00 மணியளவில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தொகை மதிப்புப் புள்ளிவிவரத் திணைக்களத்தின் மாவட்ட புள்ளி விவரவியலாளர் எஸ். ஜெயவிந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் கலந்து கொண்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பு தொடர்பில் கருத்துரைகளை வழங்கினார்.

இதன்போது, நெல் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்கான அளவீடுகளைச் செய்யும் உத்தியோகத்தர்களுக்குரிய அறிவுறுத்தல்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் வி. சோதிலட்சுமி, கிளிநொச்சி மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் தொகை மதிப்புப் புள்ளிவிவரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணையைமீறி செயல்படுகின்றது அரசு!

## மக்கள் போராட்ட முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 25

**மக்களின் எதிர்பார்ப்புகளை தவிடுபொடியாக்கும் வகையிலேயே அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்று மக்கள் போராட்ட முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மக்கள் போராட்ட முன்னணியின் செயற்பாட்டாளர் சட்டத்தரணி நுவான் போபகே கூறியவை வருமாறு-

மின்சாரக் கட்டணம் 30 சதவீதத்தால் குறைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால் மின் கட்டணம் தற்போது அதிகரித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் வெளிப்படுத்தப்படுவார்கள் எனவும் கூறப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. மாறாக பிள்ளையானுடன் கூட்டு சேர்ந்து வாகரையில் ஆட்சி அமைக்கின்றனர் ஆட்சியாளர்கள்.

காலியில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மொட்டு கட்சியுடன் என்பிபி இணைந்து ஆட்சியமைக்கின்றது. தொண்டமானின் பிடிக்குள் இருந்து மலையகம் மீட்கப்படும் எனக் கூறியவர்கள், மலையகத்தில் இதொகாவின் ஆதரவுடன் ஆட்சியமைக்கும் நிலையும் காணப்படுகின்றது.

இவ்வாறு மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் அபிலாஷைகளை தவிடுபொடியாக்கும் வகையிலேயே அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைக்கின்றன- என்றார். (அ)

# கொழும்பில் செலவு அதிகம்!

கொழும்பு, ஜூன் 25

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கான உத்தியோக பூர்வ வறுமைக்கோடு தரவுகளைத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, தனிநபர் ஒருவர் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு மாதாந்தம் குறைந்தபட்சம் 16,342 ரூபாய் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் இந்த தொகை அறிவிக்கப்பட்டிருந்தாலும், மாவட்டங்களுக்கமைய இந்த தொகையில் மாற்றம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரவுகளின் அடிப்படையில், 25 மாவட்டங்களில் அதிக செலவினத்தைக் கொண்ட மாவட்டமாக கொழும்பு மாவட்டம் அமைந்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் தனிநபரின் மாதாந்த செலவு 17,625 ரூபாவாக காணப்படு கின்றது.

குறைந்த செலவினத்தைக் கொண்ட மாவட்டமாக மொனராகலை மாவட்டம் பதிவாகியுள்ளது. மொனராகலை மாவட்டத்தில் தனி நபர் ஒருவர் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, மாதாந்தம் 16,626 ரூபாய் தேவைப்படுவதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# பிரிட்டன் விஜயம் தொடர்பில் ரணிலிடம் சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, ஜூன் 25

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் பிரிட்டனுக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

சம்பந்தப்பட்ட தனிப்பட்ட பயணத்திற்கு அரச நிதி செலவிடப்பட்டதாக முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, வெளிவிவகார அமைச்சில் பணியாற்றிய 2 அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகக் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# 119 அவசர இலக்கத்தை தவறாக பயன்படுத்தாதீர்

கொழும்பு, ஜூன் 25

119 எனும் அவசர இலக்கத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு பொலிஸ் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதன்படி, குறித்த துரித இலக்க மையத்தைத் தவறாகப் பயன்படுத்திய சம்பவங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தேவையான முறைப்பாட்டுக்கு மேலதிகமாக, போலியான முறைப்பாடுகள் மற்றும் ஏனைய அவசர சேவைகளுக்குப் பரிந்துரைக்கப்பட வேண்டிய முறைப்பாடுகளும் இந்த துரித இலக்கம் ஊடாக பெறப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய சேவைகள் மூலம் குறித்த தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்ற போதிலும், கையூட்டல், காணி, நிதி தகராறுகள் போன்ற வழக்குகள் தொடர்பான முறைப்பாடுகளும் இந்த அவசர அழைப்பு மையத்திற்குக் கிடைப்பதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதன்படி, அவசர தேவைகளின்போது 119 அவசர அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளும் திறன் மிகக் குறைவாகக் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# நாடு அவசரகால நிலைக்கு தயார்ப்படுத்தப்படவேண்டும்!

## மரிக்கார் எம்.பி.வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 25

எந்தவொரு அவசர காலநிலையொன்றையும் எதிர்கொள்ளும் வகையில் நாடு தயார்ப்படுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ""மத்திய கிழக்கில் போர் பதற்றம் அதிகரித்துக் கொண்டிருப்பதன் காரணமாக சர்வதேச ரீதியாக பாரிய நெருக்கடிகள் உருவாகும் நிலை தோன்றியுள்ளது.

எரிபொருள் விலை தாறுமாறாக அதிகரிப்பதுடன், பாரியளவில் எரிபொருள் தட்டுப்பாடும் உருவாகலாம்.

அதேபோன்று மத்திய கிழக்கில் பணியாற்றும் இலங்கையர்களின் தொழில்வாய்ப்பு, அதன் காரணமாக கிடைக்கப் பெற்று வரும் அந்நியச் செலாவணி விடயங்களிலும் பாதிப்பு ஏற்படலாம்.

இவ்வாறான அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளத் தக்க வகையில் நாடு தயார்ப்படுத்தப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான ஒரு தயார்ப்படுத்தலை இதுவரை காணக்கிடைக்கவில்லை-என்றார். (அ)

# அறுவைச் சிகிச்சை நிபுணர் உட்பட மூன்று பேரின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 25

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் ஒருவர், நிர்வாக உதவியாளர் ஒருவர் மற்றும் அவரது ஊழியரின் விளக்கமறியல் ஜூலை 8 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவு, கொழும்பு பிரதம நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்கவினால் நேற்று செவ்வாய்க்கிழமை பிறப்பிக்கப்பட்டது.

சந்தேக நபர்களான ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் மகேஷி சூரசிங்க விஜேரத்ன, அதே மருத் துவமனையின் மேலாண்மை உதவியாளர் செகுலந்தல லியனகே இந்திகா மற்றும் மருத்துவரால் நடத்தப்படும் தனியார் நிறுவ னத்தின் ஊழியர் நிமல் ரஞ்சித் ஆகியோர் ஜூன் 17 ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

# எரிபொருள்கள் நெருக்கடியை எதிர்கொள்ள தயார் நிலையில்!

கொழும்பு, ஜூன் 25

மத்திய கிழக்கில் நடந்து வரும் மோதல்கள் மற்றும் அதிகரித்து வரும் பதற்றங்கள் காரணமாக எதிர்காலத்தில் ஏதேனும் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டால் தேவையான நடவடிக்கைகளை எடுக்க திட்டமிட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஈரானின் அணுசக்தி நிலையங்களைத் தாக்குவதில் இஸ்ரேலுடன் இணைய அமெரிக்கா வார இறுதி நடவடிக்கை எடுத்தது விநியோக கவலைகளைத் தூண்டியதால், உலக எண்ணெய் விலைகள் திங்களன்று ஜனவரி மாதத்துக்குப் பிறகு மிக உயர்ந்த மட்டத்தை எட்டியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி, பிரென்ட் மசகு எண்ணெய் 3.20 டொலர் அதிகரித்து 80.28 டொலர் ஆகவும், அமெரிக்க மசகு எண்ணெய் 2.89 டொலர் ஆகவும் 76.73 டொலர் ஆகவும் உயர்ந்தன.

மேற்கத்திய நாடுகளுக்கு தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தலாக ஈரானின் அச்சுறுத்தலாக பரவலாகக் கருதப்படும் ஒரு படியாக, அதன் நாடாளுமன்றம் ஹார்முஸ் நீரிணையை மூடுவதற்கான நடவடிக்கைக்கு ஞாயிற்றுக்கிழமை ஒப்புதல் அளித்தது.

உலகளாவிய எண்ணெய் கப்பல்களில்கிட்டத்தட்ட கால்பகுதி ஈரான் ஓமன் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்டன் பகிர்ந்து கொள்ளும் இந்த குறுகிய நீர்வழிகள் மூலமாக செல்கின்றன.

நீரிணையை மூடுவதன் மூலம் வளைகுடா எண்ணெய் வர்த்தகத்தை மூச்சுத் திணறடிக்க முயற்சிப்பது உலகளாவிய எண்ணெய் விலைகளை முன்னெப்போதும் இல்லாத அளவிக்கு உயர்த்தக் கூடும்.

இது உலகப் பொருளாதாரத்தை தடம் புரளச் செய்யலாம்.

இதனால், வரும் வாரங்களில் உலகளவில் எண்ணெய் விலைகள் தொடர்ந்து உயரக் கூடும் என்று ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

இந் நிலையில் இந்த நெருக்கடி அதிகரித்தால் நிலைமையை நிர்வகிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க திட்டமிட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்கூறியுள்ளது.

வளர்ந்து வரும் உலகளாவிய எண்ணெய் நெருக்கடியின் தாக்கம் ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் நீடிக்கும் என்று அது கணித்துள்ளது.

அதன் தற்செயல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பாரம்பரிய விநியோகச் சங்கிலிகளில் இடையூறுகள் ஏற்பட்டால், நைஜீரியா உட்பட பல மாற்று நாடுகளின் எண்ணெய் மாதிரிகளை சோதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# ஜூன் 30 முதல் ஜூலை 05 வரை விசேட டெங்கு ஒழிப்புத் திட்டம்

கொழும்பு, ஜூன் 25

நாட்டில் டெங்கு அதிகரிப்பதன் காரணமாக ஜூன் 30 முதல் ஜூலை 05 வரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 27,207 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 15 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடையாளம் காணப்பட்ட மாகாணங்களில் மேல் மாகாணத்தில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான சதொச வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 25

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிரான சதொச நிறுவன மோசடி வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வர்த்தக அமைச்சராக பணியாற்றிய காலத்தில் அவரின் கீழ் செயற்பட்ட சதொச ஊழியர்களை மோசடியான முறையில் அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்திக் கொண்டதாக குற்றம் சாட்டி இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன் போது ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அமைச்சராக இருந்த காலத்தில் அவரது ஒருங்கிணைப்பு அதிகாரியாக பணியாற்றிய விஜேரத்ன என்பவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உலக முடிவு"சுற்றுலா தலத்துக்கு செல்ல மேலும் இரு நடைபாதைகள்

கொழும்பு, ஜூன் 25

நுவரெலியா மாவட்டத்தில் ஹோர்டன் சமவெளியில் அமைந்துள்ள "உலக முடிவு" சுற்றுலா தலத்துக்கு செல்ல மேலும் இரண்டு நடைபாதைகளை அமைக்க பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடைபாதைகள் பார்வையாளர்களுக்கு மிகவும் அற்புதமான இயற்கை காட்சிகளை தர உள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற நோன் பரீல் தேயிலைத் தோட்டம் ஊடாக ஒரு நடை பாதையும், கத்பொத்துதென்ன ஊடாக இஹல கலகம வீதியில் மற்றுமொரு நடைபாதையும் அமைக்க கடந்த வாரம் இம்புல்பே பிரதேச செயலகத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த பகுதிகள் சூரதலி மற்றும் பஹந்துவ நீர்வீழ்ச்சிகள் மற்றும் ஹிரிகட்டு ஓயா மற்றும் சமனல குளம் ஆகியவற்றுக்கு பிரசித்தி பெற்றவைகளாகும்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன மற்றும் அதிகாரிகளுடன் பெலிஹூல் ஆற்றை சுற்றுலா தலமாக மேலும் அபிவிருத்தி செய்வதற்கான வழிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நோன் பரீல் பகுதி மற்றும் பிற இடங்களை அதிகாரிகள் நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் 50 இலட்சம் உள்ளூர் மட்டும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உலக முடிவுப் பகுதியைப் பார்வையிட வருகின்றனர்.

அவர்கள் அனைவரும் நுவரெலியா மாவட்டம் ஊடாக மூன்று பாதைகளைப் பயன்படுத்துகின்றனர். (அ)

## இலங்கைக்கு போதைப்பொருள் எடுத்துச் செல்வதை தவிருங்கள்

### பிரிட்டன் தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 25

இலங்கைக்கு சட்டவிரோத போதைப்பொருட்களை எடுத்து செல்வது குறித்து பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சு தனது நாட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு விமான நிலையத்தில் போதைப்பொருட்களுடன் பிரிட்டனைச் சேர்ந்த பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதை தொடர்ந்தே பிரிட்டன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

கஞ்சா உள்ளிட்ட சட்டவிரோத போதைப்பொருட்களுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. விமான நிலையம் வழியாக கொண்டு செல்லும்போது உட்பட சட்டவிரோத போதைப்பொருட்களை வைத்திருந்தால் பயன்படுத்தினால் அல்லது கடத்தினால் நீண்ட சிறைத்தண்டனை மற்றும் கடுமையான அபராதம் விதிக்கப்படும். இலங்கையில் உள்ள விமான நிலையங்கள் சட்டவிரோத பொருட்களைக் கண்டறிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. " என்று பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் போதைப் பொருள் குற்றங்கள் பயங்கரவாதம் மற்றும் பிற அனைத்து கடுமையான குற்றங்களுக்கும் கடுமையான தண்டனைகள் இருப்பதாக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது

"அதிகாரிகள் உங்களை காலவரையின்றி குற்றச்சாட்டு இல்லாமல் தடுத்து வைக்கலாம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் நீங்கள் நீண்ட சிறைத்தண்டனையை சந்திக்க நேரிடும்" என்று எச்சரித்தது.

தெற்கு லண்டனைச் சேர்ந்த 21 வயதான சார்லோட் மே லீ தாய்லாந்திலிருந்து விமானத்தில் வந்தபோது அவரது சூட்கேஸ்களில் 46 கிலோ கஞ்சாவை அதிகாரிகள் கண்டுபிடித்ததாகக் கூறப்பட்டதை அடுத்து மே மாதம் இலங்கையில் கைது செய்யப்பட்டார்.

## கனடா புறப்பட்டார் பிரதமர்!



கொழும்பு, ஜூன் 25

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று அதிகாலை கனடாவுக்கு புறப்பட்டுச் சொன்றார்.

தெற்காசிய பிராந்தியத்தின் பிரதிநிதியாக காமன்வெல்த் கற்றல் ஆளுநர்கள் சபையில் பங்கேற்பதற்காக நேற்று அதிகாலை கனடாவுக்குப் புறப்பட்டார்.

கொமன்வெல்த் கற்றல் ஆளுநர்கள் சபைக் கூட்டம் ஜூன் 24 முதல் 26 வரை கனடாவின் வன்கூவரில் நடைபெறுகிறது.

இந்த உச்சிமாநாடு முதன்மையாக சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான கல்வி மற்றும் பயிற்சி, உயர்கல்வி, ஆசிரியர் கல்வி, வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் தொழில்முறைக் கற்றலை மேம்படுத்த டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்பு ஆகிய முக்கிய துறைகளில் கவனம் செலுத்தும்.

புதுமை மற்றும் ஆராய்ச்சியில் முதலீடு செய்தல், நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களின் டிஜிட்டல் மாற்றத்தை ஆதரித்தல், பயனுள்ள கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்புகளை செயல்படுத்துதல் மற்றும் பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல் ஆகிய தலைப்புகளிலும் விவா தங்கள் கவனம் செலுத்தும். (அ)

# தேசிய பாதுகாப்புச் சபை கூட்டத்தை உடன் கூட்டவும்!

### சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 25

**'இஸ்ரேல்-ஈரான் போரால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பில் ஆராய்ந்து, தீர்வு திட்டங்களை முன்வைப்பதற்காக தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்தை உடன் கூட்டுங்கள்."இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.**

'பாரசீக வளைகுடாவை அரேபிய கடலுடன் இணைக்கும் ஹார்முஸ் ஜயசந்தியை மூடும் முடிவை ஈரான் பாராளுமன்றம் எடுத்துள்ளது.

இதனால் மசகு எண்ணெய், இயற்கை எரிவாயு, எல்.என்.ஜி. காஸ் துறைகளில் பெரும் பிரச்னை எழக்கூடும்.

ஏனெனில் சர்வதசே எண்ணெய் வர்த்தக விநியோகத்தில் 20-30 சதவீதத்துக்கிடையிலான விநியோகம் ஜலசந்தி நீர் வழித்தடம் ஊடாகவே செல்கின்றது. இது தடை பட்டால் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளில் கடுமையான அதிகரிப்பு ஏற்படும் என பல தரப்பினரும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். " - எனவும் சஜித் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காமல், தேசிய பாதுகாப்பு பேரவைக் கூட்டத்தை உடன் கூட்டி, எழுந்துள்ள இந்த பிரச்னைக்குத் தீர்வுகளைக் காண வேண்டும்.

அத்துடன், ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும் பட்சத்தில் எரிசக்தித் துறையில் ஏற்படும் பாதிப்பை நிவர்த்தி செய்ய மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அது பற்றியும் ஆராயப்பட வேண்டும்.

அதேவேளை, மத்திய கிழக்கில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்கள் குறித்து ஆராய்ந்து, அவர்களினது வாழ்க்கைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது எழுந்துள்ள சூழ்நிலைக்கு மத்தியில் ஏதேனும் தொழில் இழப்புகள் ஏற்பட்டால், அது நாட்டை கடுமையாக பாதிக்கும். எனவே இந்த விடயம் உள்ளிட்ட பன்முக நோக்கிலான ஆராயந்து பார்க்குமாறு கோருகின்றேன்.

மேலும், சுற்றுலாத் துறை பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம், உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு கையிருப்பு ஆகியவற்றிலும் இது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இத்தகைய சூழ்நிலையில், தற்போதைய அரசாங்கம் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பை நல்கி வரும் தொழிற்துறை, விவசாயம் மற்றும் சேவைகள் துறை உட்பட ஒட்டுமொத்த துறைகளிலும் ஏற்படும் தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை கையாள்வதற்கு ஏற்ற தேசிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். சகல தரப்பினருடனும் கலந்துரையாடி தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காண வேண்டும்-என்றார்.(அ)

## பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 25

தேசிய நுகர்வோர் விலைக் சுட்டெண்ணின் அடிப்படையில், நாட்டின் முதன்மை பணவீக்கம் 2025 மே மாதத்தில் 0.6 வீதமாக உயர்ந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களத்தின் சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, 2025 ஏப்ரல் மாதத்தில் - 0.8 வீதமாக பதிவாகி இருந்தது.உணவுப் பிரிவில் முதன்மை பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 2.9 வீதமாக இருந்த நிலையில், மே மாதத்தில் 5.9 வீதமாக உயர்ந்துள்ளது. அதேவேளை, உணவு அல்லாத பிரிவில் முதன்மை பணவீக்கம் ஏப்ரலில் -3.7 வீதமாக இருந்தது மே மாதத்தில் -3.4 வீதமாக சற்று அதிகரித்துள்ளது. (அ)

## 16000 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருள் கைப்பற்றல்



கொழும்பு, ஜூன் 25

2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பெருமளவான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இதுவரையான காலப்பகுதியில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் அளவு பின்வருமாறு-

1,253 கிலோகிராம் ஹெரோயின், 2,121 கிலோகிராம் ஐஸ், 12,491 கிலோகிராம் கஞ்சா, 22 கிலோகிராம் கொக்கெய்ன், 1.6 மில்லியன் போதை வில்லைகள் , 1 மில்லியன் போதை மாத்திரைகள்.

இந்நிலையில், கடந்த 5 மாதங்களில் மாத்திரம் 2 மெற்றிக் தொன் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார். (அ)

# கொழும்பு மத்திய பஸ் நிலையத்தை நவீனமயப்படுத்த அரசாங்கம் திட்டம்!

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்துக்கு இணையாக கொழும்பு மத்திய பஸ் நிலையத்தை ஒரு வருடத்தில் நவீனமயப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கு இணையாக, நாடளாவிய ரீதியில் 50 பிரதான பஸ் நிலையங்களை நவீனமயப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இந்த வேலைத்திட்டத்துக்கு விமானப்படையின் ஆதரவு பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.மத்திய பஸ் நிலைய [illegible] கவுண்டர்கள், நிர்வாகப் பிரிவு, செயல்பாட்டு அறை மற்றும் சாரதிகள் தங்குமிடம் ஆகியவற்றை நவீனமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஹெக்ரேயர் 1.42 நிலப்பரப்புடன் கூடிய மத்திய பஸ் நிலையம்1964 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன், தினசரி 1500 - 2000 வரையிலான பஸ்கள் இயக்கப்படுகின்றன.

கிலீன் சிறீலங்கா வேலைத் திட்டம் தொடர்பாக நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத் தில் நடைபெற்ற கலந் துரையா டலின்போது இந்த விட யங்கள் தெரிவிக்கப்பட்டன.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமா நாயக்க, பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல்(ஓய்வு) சம்பத் துய்யகொந்தா, விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் பிரதமரை சந்தித்து முக்கிய பேச்சு!



கொழும்பு, ஜூன் 25

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டுக்கு வருகைதந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கை வெளிநாட்டலுவலகள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா வரவேற்றார்.

அவர் நாளை வரை 03நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார்.

ஆணையாளர் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்திக்க இருந்த நிலையில் நேற்று முன் தினம் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை சந்தித்தார்.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பல அமைச்சரவை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மூத்த அரசு அதிகாரிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் இராஜதந்திர சமூக உறுப்பினர்களை சந்திக்க உள்ளார். (அ)

## மாற்று விமான நிலையங்களுக்கு உடனே திருப்பப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ்!

கொழும்பு, ஜூன் 25

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றம் மற்றும் வான்வெளி கட்டுப்பாடுகள் காரணமாக, சிறிலங்கன் எயார்லைன்ஸ் ஐந்து சர்வதேச விமானங்களை மஸ்கட், ரியாத் மற்றும் டுபாய் ஆகிய இடங்களில் உள்ள மாற்று விமான நிலையங்களுக்கு திருப்பிவிட்டுள்ளது.

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பாதிக்கப்பட்ட விமானங்கள் மாற்று வழித்தடத்தில் திருப்பி விடப்பட்டதாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட சரியான வழித்தடங்களை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையகம் குறிப்பிடவில்லை.

ஆனால் பயணிகள் நிகழ்நேர புதுப்பிப்புகளுக்கு விமான நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தினர்.

பிராந்திய வான்வெளி இடையூறுகளுக்கு பதிலளிக்கும் விதமாக, இலங்கையின் இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் எந்தவொரு அவசர தரையிறக்கங்கள் அல்லது மாற்றுப்பாதையில் இயக்கப்படும் விமானங்களையும் பொருத்துவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கட்டார் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட சிவில் விமான நிறுவனங்களுக்கு உதவ ஆணையகம் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது. (அ)

## அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்குப் பிணை!

கொழும்பு, ஜூன் 25

அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் மொஹான் கருணாரத்னவை பிணையில் விடுவிக்க அனுராதபுரம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, சிறைச்சாலை அத்தியட்சகர் தலா 5,00,000 ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மேலும், அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

இந்த வழக்கு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாலைதீவு ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் ஜனாதிபதி செயலகத்திற்கு கல்வி சார் விஜயம்

கொழும்பு, ஜூன் 25

மாலைதீவு ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள், ஜனாதிபதி செயலகத்திற்கு கல்வி சார் விஜயம் மேற்கொண்டனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி வரை அவர்கள் இலங்கையில் தங்கியிருப்பார்கள்.அவர்களின் இந்த கல்வி சார் விஜயத்தின் சிறப்புக் கவனம் செலுத்தும் பகுதிகளில், ஆவணக் காப்பகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் பாதுகாப்பு, களஞ்சிய முகாமைத்துவம், இன்வென்டரி நிர்வாகம் மற்றும் கையிருப்புப் பாதுகாப்பு ஆகியவை உள்ளடங்குகின்றன.

இந்த விஜயத்தின் போது அவர்கள், தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களம், இலங்கை சுங்கம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம், இலங்கைப் நாடாளுமன்றம் ஆகிய இடங்களுக்குச் செல்லவுள்ளனர்.

மாலைதீவு ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் 08 பேர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதுடன், அவர்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகேயுடன் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டனர்.ஜனாதிபதி செயலக அதிகாரிகள் குழுவினரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (அ)

## கொட்டாஞ்சேனை மாணவி விவகாரம் விசாரணை அறிக்கை கோரும் நீதிமன்று

கொழும்பு, ஜூன் 25

கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாக தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்த விசாரணையின் முன்னேற்றம் குறித்து அறிக்கை அளிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்று கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதே வேளை, கொழும்பு வடக்கு குழந்தைகள் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகள் உயிரிழந்த சிறுமியின் தாய், மூன்று பாடசாலை மாணவிகள் மற்றும் ஒரு ஆசிரியரிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

விசாரணைக்குத் தேவையான பாடசாலையின் சி.சி.ரி.வி கமெராக்களின் டி.வி.ஆர் இயந்திரம், மற்றொரு விசாரணைக்காக பொது நிர்வாக அமைச்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனால் ஏற்பட்ட தாமதம் குறித்து கேள்வி எழுப்பிய நீதவான், உடனடியாக இயந்திரத்தைப் பெற்று மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

இதன் பின்னர் முறைப்பாட்டை எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு அழைக்க உத்தரவிட்ட நீதவான், அன்றைய தினம் விசாரணையின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தர விட்டார். (அ)

## கட்டாரில் உள்ள இலங்கையர்கள் வீட்டிலேயே இருக்க அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 25

அதிகரித்து வரும் பிராந்திய பதற்றங்கள் காரணமாக, கட்டாரில் உள்ள இலங்கை குடிமக்கள் வீட்டிலேயே இருக்கவும், விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கட்டார் அரசாங்க அதிகாரிகள் மற்றும் தூதரகம் வழங்கிய ஆலோசனைகளை இலங்கையர்கள் நெருக்கமாகப் பின்பற்றுமாறு அங்குள்ள இலங்கைத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

அவசரநிலை ஏற்பட்டால், இலங்கையர்கள் தூதரகத்தை பின்வரும் வழிகளில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்:

மின்னஞ்சல் - emergency.sldoha@gmail.com

துரித எண் -+97471182587

திங்களன்று கட்டாரில் உள்ள அல் உதெய்த் விமானப் படைத் தளத்தின் மீது அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் இந்த ஆலோசனை வந்துள்ளது. (அ)

## செவ்வந்தி நாட்டிலிருந்து தப்பிச் செல்லவில்லை!

கொழும்பு, ஜூன் 25

பாதாள உலகக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் தேடப்படும் பெண் சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி இலங்கையிலிருந்து தப்பிச் செல்லவில்லை என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றின்போது பேசிய அமைச்சர் விஜேபால, இதுவரை சேகரிக்கப்பட்ட தகவல்கள் அவர் நாட்டை விட்டு ஓடிவிட்டதாகக் சுட்டிக்காட்டப்படவில்லை என்று கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகளின்போது,

கொலை தொடர்பான தகவல்கள் மற்ற சந்தேக நபர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கொலை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறை முறையான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

## சிறப்பு விமானத்தில் இஸ்ரேலில் இருந்து புறப்பட தயாராகும் 17 இலங்கையர்கள்!

கொழும்பு, ஜூன் 25

மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் வன்முறைகளுக்கு மத்தியில், இந்திய அரசாங்கத்தால் இயக்கப்படும் சிறப்பு விமானத்தில் பயணிக்க இஸ்ரேலில் உள்ள மொத்தம் 17 இலங்கையர்கள் பதிவு செய்துள்ளதாக அங்குள்ள இலங்கை தூதர் நிமல் பண்டார தெரிவித்தார்.

அதன்படி, இலங்கையர்கள் இன்று புதன்கிழமை ஜோர்டானில் உள்ள அம்மான் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் புதுடில்லிக்கு புறப்பட உள்ளனர். இஸ்ரேலின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இலங்கைக்குப் பயணிக்க விரும்புவோருக்கு, ஜோர்தானின் அம்மானில் இருந்து இந்தியாவின் புதுடில்லிக்கு இயக்கப்படும் இந்தியன் எயார்லைன்ஸ் விமானங்களில் குறைந்த எண்ணிக்கையிலான இருக்கைகளை வழங்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

அதன்படி, இந்த வாய்ப்பை பயன்படுத்த ஆர்வமுள்ள நபர்கள் தூதரகத்துக்குச் சென்று பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

டெல் அவிவிலிருந்து ஜோர்தானின் அம்மானுக்கு இலவச



போக்குவரத்து வழங்கப்படும்.

மேலும், அம்மானில் இருந்து புதுடில்லிக்கு விமானப் பயணத்திற்கு கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# குடும்பப் பெண் சடலமாக மீட்பு இரட்டையரான பெண்கள் கைது

கல்முனை, ஜூன் 25

கொடூரமாக கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட குடும்பப் பெண்ணின் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் சகோதரிகளான இரட்டையர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஷ்ணு கோவில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் தனித்திருந்த 38 வயது மதிக்கத்தக்க இரண்டு பிள்ளைகளின் தாயான மனோ தர்ஷன் விதுஷா என்ற குடும்பப்பெண் கடந்த மே மாதம் 30ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

இதேவேளை பொதுமக்களின் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்ட குறித்த சம்பவம் தொடர்பில் பல தரப்பினரும் விசாரணை மேற்கொண்டிருந்த நிலையில் 24 நாட்களின் பின்னர் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் டி. சி. டி. பி. என அழைக்கப்படும் அம்பாறை மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவில் இணைக்கப்பட்ட உப பரிசோதகர் எம். அஸீம் தலைமையிலான அணி குறித்த படுகொலை தொடர்பில் 34 வயதுடைய இரட்டையரான சகோதரிகளை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-01)

# திருகோணமலை செயலக கணக்காய்வு குழுக்கூட்டம்

திருகோணமலை, ஜூன் 25

2025 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் நேற்று திருகோணம லை மாவட்ட செயலக உப ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட செயலகம் உட்பட பிரதேச செயலகங்களின் கணக்காய்வு முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பல விடயங்கள் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி (கிழக்கு மாகாணம்) எம்.எச்.எம். அரபாத் , கணக்காய்வு அத்தியட்சகர் என். ஜி. என். ரத்னசிறீ, பிரதம உள்ளக கணக்காய்வாளர் பா. கேதீஸ்வரன், பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். (எ)

# 35 வருடங்களாக பரிதவிக்கும் மக்கள் காணியை மீட்டுத் தரக் கோரிக்கை

## அம்பாறை மேலதிக அரச அதிபரிடம் முறையீடு



கல்முனை, ஜூன் 25

**35 வருடங்களாக தமது காணியை இழந்து பரிதவித்து வருவதாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜனிடம் தொட்டாச் சுருங்கி கிராம மக்கள் முறையிட்டுள்ளனர்.**

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு முறையிட்டனர்.

உரிய ஆவணங்களை பார்வையிட்ட மேலதிக அரசாங்க அதிபர், முறையாக சகல ஆவணங்களையும் திரட்டி முழுமையான அறிக்கையை கிழக்கு மாகாண ஆளுநர் நந்தலால் ரத்னசேகரவுக்கு சமர்ப்பிப்பதாக உறுதியளித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் கூறுகையில்,

35 வருடங்களாக எமது வயல் காணிகளை இழந்த நிலையில் அம்பாறை மல்வத்தை உள்ளிட்ட சில கிராமங்களைச் சேர்ந்த 70 இற்கும் மேற்பட்ட தமிழ் விவசாய குடும்பங்கள், நீதி மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகிறோம்.

அம்பாறை மல்வத்தை கமநல சேவை பிரிவுக்குட்பட்ட தொட்டாச்சுருங்கி விவசாயக் காணி, கடந்த 35 வருடங்களுக்கு முன்னர் பெரும்பான்மை இனத்தவர்களால் கபளீகரம் செய்யப்பட்டது. எம்மை விவசாயம் செய்ய விடாமல் எந்த வித காணி ஆவணங்களும் இன்றி அவர்களே விவசாயம் செய்து வருகின்றனர். இதனால், எமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது- என்றனர்.

குறித்த பிரதேசத்தில் 402 ஏக்கர் வயல் நிலங்கள் இருந்ததாகவும் அதில் 180 ஏக்கர் வரை தற்போது செய்கை பண்ணப்பட்டு வரும் நிலையில்,


164 ஏக்கர் விவசாய நிலத்துக்கு சொந்தக்காரர்களான

70 இற்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களை சேர்ந்தவர்களை பெரும்பான்மை இனத்தவர்கள் செய்கை பண்ண விடாமல் தாமே விவசாயத்தை மேற்கொண்டு வருவதுடன், அரச அதிகாரிகளும் அவர்களுக்கு ஆதரவு வழங்கும் வண்ணம் செயல்படுவது தமக்கு இழைக்கப்படும் அநீதியாகவே தாம் பார்க்கிறோம் - என்றும் கூறினர்.

தொட்டாச்சுருங்கி கண்டம் ஆரம்ப காலத்தில் சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்டதாக இருந்த நிலையில் தற்போது உகனை பிரதேச செயலகத்துக்குரிய காணியென அதிகாரிகள் கூறுவது தமக்கு ஆச்சரியமாக இருப்பதாகவும், இதற்கு மாவட்ட செயலகமும் உடந்தையாக இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த வயல் காணிகளுக்கு சொந்தக்காரர்களான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தற்போது மல்வத்தைவீரமுனை, கல்முனை ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்தனர். (எ-08)

# அணையா விளக்கு போராட்டத்துக்கு ஆதரவாக தீப்பந்தம் ஏந்தி போராட்டம்



மட்டக்களப்பு, ஜூன் 25

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரும் அணையா விளக்கு போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் முகமாக மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு - ஒந்தாச்சிமடம் பாலத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தீப்பந்தம் ஏந்தி போராட்டம் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ஞா. சிறீநேசன் மற்றும் இ. சிறிநாத், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் பேரணியாக சென்று பின்னர் பாலத்தின் நடுப்பகுதியில் தீப்பந்தங்களை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# குச்சவெளி பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் வசம்



திருகோணமலை, ஜூன்25

திருகோணமலை, குச்ச வெளி பிரதேச சபையின் தவி சாளர் தெரிவு நேற்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற் றது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். அஸ்மி தலைமையில் நடை பெற்ற இந்த தவிசாளர் தெரி வில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அயினியப்பிள்ளை முபாறக் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

தவிசாளர் தெரிவின்போது இருவர் போட்டியிட்டனர். இதில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முபாறக் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அப்துல் மனாப் ரிஸான் ஆகியோர் போட்டியிட்டனர். இதில் திறந்த வாக்கெடுப்பின் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் 06 உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பை கோரி சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். ஓர் உறுப்பினர் சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றுக்கிடையிலான உடன்படிக்கையின் படி முதல் இரண்டு ஆண்டுகளுக்கு முஸ்லி காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் தவிசாளர் பதவியை வகிப்பது என்றும் தொடர்ந்துவரும் இரண்டு ஆண்டுகளுக்கு தமிழ் அரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் தவிசாளர் பதவியை வகிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தவிசாளர் தெரிவில் சபைக்கு தெரிவு செய்யப்பட்ட 16 உறுப்பினர்களில் 15 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் முஸ்லிம் காங்கிரஸ் 5, தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த 4, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 4, ஐக்கிய மக்கள் சக்தி 2, சுயச்சைக் குழு 1 என இச் சபையில் அங்கம் வகிக்கின்றனர். தேசிய மக்கள் சக்தி சபை அமர்வை புறக்கணித்திருந்தது.(எ- 04)

# துறைமுகம் வந்த பயணிகளுக்கு தவறான மருத்துவ அறிக்கைகள்

திருகோணமலை, ஜூன் 25

திருகோணமலை துறைமுகத்தில் கப்பல்களிலிருந்து இறங்கும் பயணிகளைச் சோதித்து மருத்துவச் சான்றிதழ்கள் வழங்க வேண்டிய பொறுப்பிலிருந்த கிண்ணியா மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர், உரிய பரிசோதனைகள் இன்றி தவறான மருத்துவ அறிக் கைகள் வழங்கியதாக கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இந்தக்கைது இடம்பெற்றது. பொலிஸ் தகவலின்படி, ஒவ்வொரு சான்றிதழுக்காக சுமார் 1200 ரூபாய் பெறப்பட்டுள்ளதும் உண்மையான மருத்துவ சோதனைகள் எதுவும் செய்யப்படவில்லை என்பதும் வெளியாகியுள்ளது.

சந்தேக நபர் போலியான மருத்துவ ஆவணங்களுக்கு பணம் பெற்றுள்ளதாகும் தற்போது அவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் மேலதிக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன என்றும் அதிகாரிகள் கூறினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை

## ட்ரம்பின் அறிவிப்புக்கு ஈரான் மறுப்பு



தெஹ்ரான், ஜூன் 25

**இஸ்ரேலுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. போர் நிறுத்தம் பற்றி ஈரான் தான் முடிவு செய்யும் என்று ஈரான் அறிவித்துள்ளது.**

ஈரான் மீது ஒப்ரேஷன் ரைசிங் லயன் என்ற பெயரில் கடந்த 13ஆம் திகதி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அப்போது, ஈரானின் அணு ஆயுத பயன்பாட்டுக்கு எதிரான தாக்குதல் இது என இஸ்ரேல் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து ஈரானும் பதில் தாக்குதலில் ஈடுபட்டது. இதனால், இரு நாடுகள் இடையே போர் பதற்றம் அதிகரித்தது. இந்த நிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் போரில் இறங்கியது. ஈரானின் பர்தவ், நடான்ஸ் மற்றும் எஸ்பஹான் ஆகிய 3 அணு உலைகள் மீது தாக்குதல் நடத்தியது. ஆனால், அதனால் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என ஈரான் கூறியது.

இதனையடுத்து, இதற்கு முன் பார்த்திராத பேரழிவை அமெரிக்கா சந்திக்கும் என ஈரான் உச்ச தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி எச்சரிக்கை வெளியிட்டார். இந்தத் தாக்குதலுக்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் உலக நாடுகள் விமர்சனங்களை வெளியிட்டன. ஒரு சில நாடுகள் நடுநிலையாக இருந்து விட்டன.

இந்த நிலையில், இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே முழு அளவில் மற்றும் ஒட்டுமொத்தத்தில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

ஆனால், ட்ரம்பின் அறிவிப்புக்கு ஈரான் மறுப்பு தெரிவித்துள்ளது. இதுபற்றி ஈரானின் வெளிவிவகார அமைச்சர் சையது அப்பாஸ் அராக்சி கூறும்போது, போர் நிறுத்தம் பற்றியோ, இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவோ எந்தவித ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. போரை நிறுத்துவது பற்றிய இறுதி முடிவு பின்னர் எடுக்கப்படும். இந்த முடிவை எங்கள் தலைவரே மேற்கொள்வார். வேறு நாடுகளின் தலையீட்டுக்கு இதில் அனுமதி இல்லை எனக் கூறியுள்ளார்.

போரை மேற்கத்திய நாடுகளே தொடங்கின. அதனால், போரை நிறுத்துவது பற்றி ஈரானே முடிவு செய்யும். இஸ்ரேல் போரை நிறுத்தினால் நாங்களும் நிறுத்துவோம். ஈரான் மக்களுக்கு எதிரான சட்டவிரோத ஆக்கிரமிப்பை இஸ்ரேல் நிறுத்தினால் நாங்கள் போரை தொடரமாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அராக்சி வெளியிட்ட எக்ஸ் பதிவில், ஐ. நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினராக அமெரிக்கா உள்ளது. ஆனால், ஐ.நாவின் விதிகளை மீறி பெரும் தவறை செய்துள்ளது.

சர்வதேச சட்டங்களையும் மற்றும் அணு ஆயுத பரவல் தடைச் சட்டம் ஆகியவற்றை மீறும் வகையில், ஈரானின் அமைதியான அணு ஆயுத நிலைகள் மீது தாக்குதல் நடந்துள்ளது. இந்த சம்பவங்கள் தீராத தொடர் விளைவுகளை கொண்டிருக்கும்.

ஐ.நாவின் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு நாடும் இந்த ஆபத்து தரும், சட்டவிரோத மற்றும் குற்ற அணுகுமுறையால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.நா. அமைப்பின் ஆவணங்கள் மற்றும் அதன் பிரிவுகளின்படி, சுய பாதுகாப்புக்கு சட்டபூர்வ அனுமதியளிக்கும் வகையில் ஈரான் தன்னுடைய இறையாண்மை, நலன் மற்றும் மக்களைப் பாதுகாக்க எல்லா வித வாய்ப்புக்களையும் வைத்திருக்கிறது என்ற தகவலை வெளியிட்டார். இதனால், ஈரான் போரை தீவிரப்படுத்தும் முயற்சியில் இறங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அதேபோன்று தாக்குதலை தொடுத்தது. (எ)

# உக்ரைனின் தலைநகரில் ரஷ்யா ட்ரோன் தாக்குதல்

கீவ், ஜூன் 25

உக்ரைனின் தலைநகரில் ரஷ்யா பெரிய அளவிலான ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் ஆயிரத்து 200 நாட்களைத் தாண்டி நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அது தோல்வியில் முடிந்தது. இதேபோல், போர் நிறுத்தம் தொடர்பில் ரஷ்யா - உக்ரைன் நடத்திய நேரடி பேச்சுக்களும் தோல்வியடைந்தது.

இதனிடையே, கடந்த முதலாம் திகதி உக்ரைன் நடத்திய தாக்குதலில் ரஷ்ய போர் விமானங்கள் அழிக்கப்பட்டன. இதனால், இரு தரப்பு மோதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனின் தலைநகர் மீது ரஷ்யா மிகப் பெரிய தாக்குதல் நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ட்ரோன்கள், ஏவுகணைகள் மூலம் உக்ரைன் தலைநகர் கீவ்-ஐ குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கீவ் இராணுவ நிர்வாகத்தின் தலைவர் டைமூர் தக்காசென்கோ வெளியிட்ட அறிக்கையில், "தலைநகரின் மீது மற்றொரு பெரிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எதிரி ட்ரோன்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஈராக் இராணுவத் தளம் மீது மர்ம ட்ரோன்கள் தாக்குதல்

பக்தாத், ஜூன் 25

ஈராக் இராணுவத் தளங்கள் மீது மர்ம ட்ரோன்கள் தாக்குதல் நடத்தியுள்ளன என அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் இருந்து வடக்கே அல் - தஜி என்ற இராணுவத் தளம் அமைந்துள்ளது. இதில், இராணுவக் கண்காணிப்பு பணிக்கான ரேடார் அமைக்கப்பட்டுள்ளது.

இது, பிரான்ஸ் நாட்டின் ரேடார் சாதனம் என கூறப்படுகிறது. எனினும், ஈராக் இராணுவம் அதனை செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையில், இந்த ரேடார் மீது மர்ம ட்ரோன்கள் (ஆளில்லா விமானங்கள்) நேற்றுக் காலை தாக்குதல் நடத்தின என்று அந்த நாட்டின் அரச ஊடகம் உறுதிப்படுத்தியுள்ளது.

# இஸ்ரேல் - ஈரான் இடையே போர் நிறுத்தம் அமுல்

## அதை மீற வேண்டாம் என்கிறார் ட்ரம்ப்



வாஷிங்டன், ஜூன் 25

இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் நிறுத்தம் அமலுக்கு வந்துள்ளது. அதை தயவு செய்து யாரும் மீறவேண்டாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரி வித்துள்ளார்.

இருப்பினும், இருநாடுகளுக்கும் இடையே எந்தப் போர் நிறுத்தமும் இல்லை என ஈரான் மறுத்துள்ளது.

இந்த நிலையில், 12 நாட்கள் தொடர்ந்து இடைவிடாமல் நடைபெற்றுவந்த இஸ்ரேல் உடனான போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் போர் நிறுத்தத்தை ஈரான் அறிவித்திருப்பதாகவும் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 09.30 மணி முதல் அமுலுக்கு வந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து ட்ரம்ப் சமூக ஊடகத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்தப் பதிவில், "இப்போது முதல் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துவிட்டது. தயவுசெய்து அதை மீறாதீர்கள்" எனப் பதிவிட்டுள்ளார். (எ)

# அமெரிக்க இராணுவ தளம்மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்

## நன்றி தெரிவித்தார் ட்ரம்ப்

வாஷிங்டன், ஜூன் 25

அமெரிக்க இராணுவத் தளம் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்டார் நாட்டில் பணிபுரியும் இந்தியர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் அமெரிக்காவும் இணைந்தது. தனது பி - 2 ரக விமானங்கள் மூலம் ஈரானின் 3 அணுசக்தி தளங்களை தாக்கியது. குறிப்பாக போர்டோ அணுசக்தி தளத்தில் பங்கர் பஸ்டர் குண்டுகளை வீசி தகர்த்தது. மேலும், நவீன ஏவுகணைகளையும் வீசி அதிரடி காட்டியது. இதில் அணுசக்தி தளங்கள் பலத்த சேதமடைந்தன.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடி வழங்கப்படும் என ஈரான் அறிவித்தது. தங்கள் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாக்க தங்களுக்கு உரிமை உண்டு எனவும் கூறியது.

அமெரிக்காவின் தாக்குதலை தொடர்ந்து ஈரானின் படைகளுக்கு அமெ ரிக்கப் படைகள் மீது தாக்குதல் நடத்த சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பதாக அந்த நாட்டின் கூட்டுப்படைத் தளபதி அப்துல் ரஹீம் மௌசவி அறிவித்திருந்தார்.

இதனால் அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது எந்த நேரத்திலும் ஈரான் தாக்குதல் நடத்தக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்காவின் பல இராணுவத் தளங்கள் ஈரானின் ஏவுகணைகள் எட்டும் தூரத்திலேயே உள்ளன. ஈரானின் இந்த எச்சரிக்கையை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கட்டார் அரசு தனது வான் எல்லையை மூடியது.

ஆனால், இதையும் மீறி ஈரான் இராணுவம் நேற்று முன்தினம் இரவு கட்டாரில் உள்ள அமெரிக்க விமானப்படைத் தளமான அல் உதெய்த் மீது அதிரடி தாக்குதல் நடத்தியது. அங்குள்ள அமெரிக்க வீரர்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடந்தது. கட்டார் மட்டுமின்றி சிரியாவிலுள்ள அமெரிக்க இராணுவத் தளத்தின் மீது ஒரு ஏவுகணைத் தாக்குதலும் ஈராக் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

வான்வழித் தாக்குதலையடுத்து கட்டாரில் உள்ள அமெரிக்கர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அமெரிக்கத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும், கட்டார், ஐக்கிய அரபு அமீரகம் பஹ் ரைன், எகிப்து, குவைத், ஜோர் தான், லெபனான், ஈராக் மற் றும் சவுதி அரேபியா தங்களது வான்வெளியை மூடியுள்ளன. கட்டார் நாட்டில் பணிபுரியும் இந்தியர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

ஈரானின் இந்தத் தாக்குதலுக்கு அரபு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. மேலும் ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் போர் நிறுத்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளன. இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு ஈராக்கும் கோரிக்கை விடுத்துள்ளது.

என்று குறிப் பிட்டுள்ளார். (எ)

# ஈரானுக்கு உதவ தயார்

## ரஷ்ய ஜனாதிபதி புடின்

மொஸ்கோ, ஜூன் 25

ஈரானுக்கு உதவத் தயார் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

ஈரானுக்கு என்ன தேவையோ அதைப் பொறுத்து செய்வோம். பேச்சுவார்த்தைக்கு உதவத் தயாராக இருக்கிறோம் என்றும் புடின் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபரப்பான கட்டத்தில் முதல் டெஸ்ட்

# இந்தியா 2ஆவது இன்னிங்ஸில் 364 ஓட்டங்கள் குவித்து அசத்தல்




லீட்ஸ், ஜூன் 25

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா 2ஆவது இன்னிங்ஸில் 364 ஓட்டங்கள் குவித்து அசத்தியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி லீட்ஸில் நடைபெற்று வருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஜெய்ஸ்வால், சுப்மன் கில், ரிஷப் பண்ட் ஆகியோரின் சதத்தின் மூலம் 471 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி 465 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஒலி போப் 106 ஓட்டங்களும் ஹாரி புரூக் 99 ஓட்டங்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் வேகப் பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா 5 விக்கெட்களை அள்ளினார்.

இதனையடுத்து 6 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி 3ஆவது நாள் முடிவில் 23. 5 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 90 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து கே. எல். ராகுல் - ரிஷப் பண்ட் ஜோடி சேர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் சதம் விளாசி அசத்தினர். சதமடித்த சிறிது நேரத்திலேயே ரிஷப் பண்ட் 118 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வீரர்களில் யாரும் நிலைத்து விளையாடவில்லை. கருண் நாயர் 20 ஓட்டங்களிலும், ஷர்துல் தாகூர் 4 ஓட்டங்களிலும், சிராஜ் மற்றும் பும்ரா ஓட்டமின்றியும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த கே.எல். ராகுலும் 137 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

96 ஓவர்கள் தாக்குப்பிடித்த இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 364 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 371 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இங்கிலாந்து தரப்பில் ஜோஷ் டங் மற்றும் பிரைடன் கார்ஸ் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 371 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி 4ஆவது நாள் முடிவில் 6 ஓவர்களில் 21 ஓட்டங்கள் அடித்துள்ளது.

ஜாக் கிராலி 12 ஓட்டங்களுடனும், பென் டக்கெட் 9 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ள னர். இங்கிலாந்து வெற்றி பெற இன்னும் 351 ஓட்டங் கள் அடிக்க வேண்டும். இந்தியா வெற்றிபெற 10 விக் கெட்களை வீழ்த்த வேண்டும். இத்தகைய பரபரப் பான சூழலில் நேற்று கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது. (எ)




## இரு இன்னிங்ஸிலும் சதம் ரிஷப் படைத்த சாதனை

லீட்ஸ், ஜூன் 25

இரு இன்னிங்ஸிலும் சதம் அடித்து ரிஷப் பண்ட் சாதனை படைத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி லீட்ஸில் நடைபெற்று வருகிறது.

இந்த டெஸ்ட் போட்டியில் இரு இன்னிங்ஸிலும் இந்திய அணி வீரர் ரிஷப் பண்ட் சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம் சில சாதனைகளை ரிஷப் பண்ட் படைத்துள்ளார். இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் ரிஷப் பண்ட் முதல் இன்னிங்ஸில் 134 ஓட்டங்களும் 2ஆவது இன்னிங்ஸில் 118 ஓட்டங்களும் விளாசினார். இவர் டெஸ்டில் இரு இன்னிங்ஸிலும் சதம் அடித்த 7ஆவது இந்தியர் ஆவார்.

இதற்கு முன்பு விஜய் ஹசாரே, சுனில் கவாஸ்கர் (3 முறை), ராகுல் டிராவிட் (2 முறை), விராட் கோலி, ரஹானே, ரோஹித் சர்மா ஆகிய இந்தியர்கள் இத்தகைய சாதனையை படைத்துள்ளனர். ஆனால், இங்கிலாந்து மண்ணில் இரு இன்னிங்ஸிலும் சதம் அடித்த முதல் இந்தியர் ரிஷப் பண்ட் தான்.

விக்கெட் காப்பாளர் ஒருவர் டெஸ்டில் இரண்டு இன்னிங்ஸிலும் சதம் காண்பது இது 2ஆவது நிகழ்வாகும். இதற்கு முன்பு சிம்பாவே அணியின் விக்கெட் காப்பாளர் ஆன்டி பிளவர் 2001ஆம் ஆண்டில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் இரு இன்னிங்ஸிலும் (142 மற்றும் 199 ஓட்டங்கள்) சதம் அடித்திருந்தார்.

லீட்ஸ் டெஸ்டில் ரிஷப் பண்ட் இரு இன்னிங்ஸிலும் சேர்த்து மொத்தம் 9 சிக்ஸர்கள் விளாசியுள்ளார். இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் ஒரு டெஸ்டில் அதிக சிக்ஸர்கள் அடித்தவர்களான இங்கிலாந்தின் அண்ரூ பிளின்டப், பென் ஸ்டோக்ஸ் (தலா 9 சிக்ஸர்) ஆகியோரின் சாதனையை சமன் செய்துள்ளார். (எ)

## ரி- 20 தொடரை கைப்பற்றியது மேற்கு இந்திய தீவுகள் அணி




பார்படாஸ், ஜூன் 25

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் மேற்கு இந்திய தீவுகள் அணி கைப்பற்றியது.

தென்னாபிரிக்க மகளிர் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 2 - 1 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற ரி - 20 தொடரின் முதல் இரு ஆட்டங்களின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றிருந்தன.

இந்த நிலையில், தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் 3ஆவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 147 ஓட்டங்கள் எடுத்தது. தென்னாபிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக மியான் ஸ்மிட் 59 ஓட்டங்கள் எடுத்தார்.

மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் கரிஷ்மா ராம்ஹராக், அபி பிளெட்சர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். தொடர்ந்து 148 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி 18. 3 ஓவர்களில் 4 விக்கெட்களை மட்டும் இழந்து 148 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக ஹேலி மத்தியூஸ் 65 ஓட்டங்கள் எடுத்தார். தென்னாபிரிக்கா தரப்பில் மரிசான் கேப் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் மேற்கு இந்திய தீவுகள் அணி கைப்பற்றியது. (எ)

## ஒலிம்பிக் போட்டிகளை நடத்த புதுடில்லி தயார்

புதுடில்லி, ஜூன் 25

2036 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்த புதுடில்லி தயாராகவுள்ளது என்று முதலமைச்சர் ரேகா குப்தா தெரிவித்தார்.

இந்தியாவின் புதுடில்லியிலுள்ள ஜே. எல். என். மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒலிம்பிக் தின ஓட்டத்தை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மண்டவியா வுடன் இணைந்து முதலமைச்சர் ரேகா குப்தா தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் ரேகா குப்தா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

## இலங்கை - பங்களாதேஷ் இரண்டாவது டெஸ்ட் இன்று

### மிலன் ரத்நாயக்க விலகல்

கொழும்பு, ஜூன் 25

இலங்கை - பங்களாதேஷ் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பில் இன்று 25ஆம் திகதி தொடங்கவுள்ளது.


பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டி சமனிலையானது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பில் இன்று 25ஆம் திகதி தொடங்கவுள்ளது. இதில் வெற்றி பெறும் அணி தொடரை வெல்லும் என்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த நிலையில் 2ஆவது போட்டிக்கான இலங்கை அணியிலிருந்து சகல துறை வீரர் மிலன் ரத்நாயக்க காயம் காரணமாக விலகியுள்ளார்.

இலங்கை அணி விவரம் பின்வருமாறு:- பதும் நிஸ்ஸங்க, ஓஷத பெர்னாண்டோ, லஹிரு உதார, தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வா, குசல் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், பசிந்து சூரியபண்டார, சோனல் தினுஷா, துனித் வெல்லாலகே, பவன் ரத்நாயக்க, பிரபாத் ஜெயசூரியா, தரிந்து ரத்நாயக்க, அகில தனஞ்சய, அஷித பெர்னாண்டோ, சுகன் ராஜித, விஷ்வ பெர்னாண்டோ, இஷித விஜேசுந்தர ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

## குயின்ஸ் கிளப் ரென்னிஸ் சம்பியனானார் அல்காரஸ்



லண்டன், ஜூன் 25

குயின்ஸ் கிளப் ரென்னிஸ் தொடரில் கார்லஸ் அல்காரஸ் சம்பியனானார்.

குயின்ஸ் கிளப் சர்வதேச ரென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் கார்லஸ் அல்காரஸ் - ஜிரி லெஹெக்கா மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் 2 செற்களை ஆளுக்கொன்றாக கைப்பற்றிய நிலையில் 3ஆவது செற்றை அல்காரஸ் கைப்பற்றி வெற்றி பெற்றார். அல்காரஸ் இந்த ஆட்டத்தில் 7-5, 6-7 மற்றும் 6-2 என்ற செற் கணக்கில் லெஹெக்காவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி...

காரர்கள், "நாங்கள் அரச காணிகளை கேட்கவில்லை எமது சொந்த நிலத் தைத் தான் கேட்கிறோம்", "எமது நிலத்தில் தான் எமது உயிர் போக வேண்டும்", "இனியும் இடம்பெயர்ந்து அவல வாழ்வு வாழ முடியாது", "எமது நிலத்தில் நிம் மதியாக வாழவேண்டும்", என்றும் முழக்கமிட்டனர். (ஐ)

## தீயில்....

என்பவரே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த நபர் நடக்க முடியாத நீரிழிவு நோயாளி ஆவார். கடந்த 22 ஆம் திகதி வீசிய பலத்த காற்றுடன் கூடிய மழையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதன்போது, வெளிச்சத்துக்காக மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கப்பட்டது. எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியில் அவரின் ஆடை பட்டதால் தீ பரவி அவர் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளானார்.

இதையடுத்து, அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இவரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார். (ஐ)

## சர்வதேச...

தலைவர்களுடனான சந்திப்பிலேயே சிறீதரன் எம்.பி. இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அந்தக் கோரிக்கை மனுவில், இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து, அடுத்தடுத்து ஆட்சிப்பீடம் ஏறிய அனைத்து அரசாங்கங்களும் சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாதத்தை நிறுவன மயமாக்கி, ஈழத்தமிழர்களின் அடையாளத்துவ வாழ்வை சிதைத்து, சுயாட்சி மற்றும் பிராந்திய ஒருமைப் பாட்டை அடியோடு இல்லாமல் செய்தன.

இதற்காக நீண்டகாலம் ஈழத்தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதியான ஜனநாயக எதிர்ப்பு போராட்டங்கள் கொடூரமாக அடக்கப்பட்ட பின்னர், ஆயுத மோதல் ஏற்பட்டிருந்த தடன், அதன் உச்சமாக 2009 மே மாதத்தில் முள்ளிவாய்க்கால் தமிழினப் படு கொலை என்ற இனப் பேரவலம் நிகழ்ந்திருந்தது.

போருக்கு பின்னரும் தமிழர் தாயகப் பகுதிகள் பெரிதும் இராணுவ மயமாக்கப்பட்டு, நில அபகரிப்புகள், மக்கள் தொகை மறுசீரமைப்பு, பொருளாதார புறக்கணிப்பு மற்றும் கலாசார அழிப்பு என்பவை தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்கான ஆயுதங்களாக அரசாலும் அரச படைகளாலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய ஆட்சியின் கீழும், இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை நிறுத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ புதிய அரசாங்கம் எந்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இதேவேளை, இலங்கை அரசாங்கம், ஐ. நா. மனித உரிமைகள் பேரவை திட்டத்தை தடையின்றி அணுகுவதைத் தொடர்ந்து மறுத்து வருகிறது. இனப் படுகொலை, போர் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிப்பதற்கான சர்வதேச முயற்சிகளையும் தடுக்கிறது.

இத்தகைய உள்ளக அரசியல் நிலை மாறுதல்களை கடந்து, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையானது தீர்மானங்களுக்கு அப்பால் நகர்ந்து, தமிழின படுகொலை விவகாரத்தை ஐ. நா. பொதுச் சபைக்கும், ஐ. நா. பாதுகாப்பு பேரவைக்கும் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்துக்கும் கொண்டு செல்லும் தெளிவான குறிக்கோளுடன்கூடிய சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றை செயல் படுத்த வேண்டும் - என்றுள்ளது.

## மன்னார்...

மக்கள் காங்கிரஸின் ஏ. ஜே. எம். ஜப்ரான் ஆகியோர் போட்டியிட்டனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு 8 வாக்குகளும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு 13 வாக்குகளும் கிடைத்தன. இதன்படி, ஏ. ஜே. எம். ஜப்ரான் தவிசாளராக தெரிவானார். இவருக்கு, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, தேசிய மக்கள் சக்தி என்பன ஆதரவளித்திருந்தன.

உபதவிசாளர் பதவிக்கான தெரிவில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் றொயிட்டன் சாந்தினி குரூஸ், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் இஸ்மாயில் முஹமது இஸ்ஸதீன் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டனர்.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆதரவாக 7 வாக்குகளும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு சார்பாக 15 வாக்குகளும் கிடைத்தன. இதனால், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் றொயிட்டன் சாந்தினி குரூஸ் உப தவிசாளரானார். இவருக்கு ஆதரவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் வாக்களித்தனர். (ஐ)

## மாந்தை...

தமிழ் அரசு கட்சியின் செ. கமலச்சந்திரன் ஆகியோரின் பெயர்கள் முன் மொழியப்பட்டன.

ஓர் உறுப்பினர் சமுகமளிக்காத நிலையில் கமலச்சந்திரனுக்கு 5 வாக்குகளும் பிறேம்குமாருக்கு 15 வாக்குகளும் கிடைத்தன. இதன்படி, பிறேம்குமார் தவிசாளராக தெரிவானார். அவருக்கு தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, சிறீ லங்கா தொழிலாளர் கட்சி என்பன ஆதரவு வழங்கின.

உப தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் நிஷாம் நிஜாத் போட்டியின்றி ஒருமனதாக தெரிவானார். (ஐ)

## மன்னார் நகர...

நகர சபையின் சபா மண்டபத்தில் நடந்த இந்தத் தெரிவின்போது, தவிசாளர் பதவிக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் ஞானப்பிர காசம் அன்ரனி டேவிட்சன், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் டானியல் வசந்தன் ஆகியோர் முன்மொழியப்பட்டனர்.

நேற்றைய தினம் 15 உறுப்பினர்களே சபைக்கு வருகை தந்தனர். அத்துடன், ஓர் உறுப்பினர் நடுநிலை வகிப்பதாக அறிவித்திருந்தார். இந்த நிலையில், நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினருக்கு 6 வாக்குகளும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உறுப்பினருக்கு 8 வாக்குகளும் கிடைத்தன. இதன்மூலம் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் டானியல் வசந்தன் தவிசாளராக தெரிவானார். இதன்போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி கட்சிகள் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு ஆதரவளித்தன.

உபதவிசாளர் பதவிக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நூர் முகமது உசைன், இலங்கை தமிழ் அரசு கட்சியின் சோமநாத் பிரசாத் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டனர். பகிரங்க வாக்கெடுப்பு கோரப்பட்ட நிலையில் உறுப்பினர்கள் இருவர் நடுநிலை வகிப்பதாக அறிவித்தனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு 8 உறுப்பினர்களும் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு 5 உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினர். இதன் மூலம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நூர் முகமது உசைன் உபதவிசாளராக தெரிவானார். இவருக்கு, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தேசிய மக்கள் சக்தி என்பன ஆதரவு வழங்கியிருந்தன.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாத் பதியுதீன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் உள்ளிட்ட [illegible] களை பார்வையிட்டனர். (ஐ)

# சர்வதேச கண்காணிப்புடன் புதைகுழிகளை அகழுங்கள்

## சர்வமத பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜுன் 25

"செம்மணி மனித புதைகுழி உட்பட கண்டறியப்பட்ட அனைத்து மனித புதைகுழிகளையும் மீளவும் ஆய்வு செய்வதுடன், அந்தப் பணி சர்வதேச கண்காணிப்புடன் மிகவேகமாக நடைபெறவேண்டும்", என்று யாழ். மாவட்ட சர்வமத பேரவை தெரிவித்துள்ளது.

செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரி போராட்டம் நடைபெறும் இந்தத் தருணத்தில் யாழ். மாவட்ட சர்வமத பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், "மனித வாழ்க்கை, எமது சமய விழுமியங்களின்படி, மாண்புமிக்கது. அதனை மதிப்புடன் நோக்குவதும் அறம் மைய ஆன்மீகத்துடன் வாழ்க்கையை வாழவேண்டும் என்பதை, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் என்பன தெளிவாக விளக்கியுள்ளன. அன்புடனும் நல்லெண்ணத்துடனும் வாழ வேண்டிய நாம் எம்மவரின் எலும்புகளை செம்மணி உட்பட பல இடங்களிலும் மனிதப் புதைகுழிகளி லிருந்து அகழ்ந்து எடுக்கிறோம் என்பது மிகமிக வேதனைக்குரியது. இது கடவுளுக்கு எதிரான, சமய விழுமியங் களுக்கு எதிரான கொடுமையான செயல். இந்தக் கொடுமையுடன் தொடர்புபட்டவர்கள் அனைவரும் நீதியின் முன்கொண்டுவரப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றின் 46/1 தீர்மானத்தின்படி, இனப் படுகொலை, போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைக், காலம் தாழ்த்தாது. விரைவாக சேகரிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம்.

"காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இந்த புதைகுழிகளுக்குள் எமது உறவுகள் உள்ளனரா?" எனும் கேள்வியை எழுப்புவதை சர்வதேச சமூகம், இலங்கையில் வாழ்வோர் அனைவரும் தெளிவாக செவிமடுத்து அவர்களுக்கு நீதி கிடைக்க முழுஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம். எமக்குத் தெரியவந்துள்ள அனைத்து மனித புதைகுழிகளையும் மீளப்பார்ப்பதும் சர்வதேச கண்காணிப்புடன் அகழ்வாராய்ச்சி மிகவேகமாக நடைபெற வேண்டும்.

இனப் பிரச்னை தீர்க்கப்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்த விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு எடுத்துச் செல்ல உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் முன்மொழிகிறோம். நீதியில்லாமல் அமைதி இலங்கையில் மட்டுமல்ல எங்கும் சாத்தியமில்லை என்பதை இலங்கைக்கும், உலகுக்கும் வலியுறுத்த விரும்புகிறோம். இனம், சமயம், மொழி, நிறம் எனும் அனைத்து வரையறைகளையும் கடந்து, இலங்கை உட்பட உலகெங்கும் பாதிக்கப்பட்டவர்கள் நிம்மதியாக வாழவும், எதிர்கால நம்பிக்கையை இன்று விதைக்கவும், கேவலமான மனித அழிப்பிலே ஈடுபட்டவர்களுடைய மனமாற்றம் தேவை என்பதை சமய விழுமியங்களின்படி வலியுறுத்துகிறோம் - என்றுள்ளது.

# பரந்தன் இரசாயன நிறுவனத்தின் தலைவராக நேசராஜன் நியமனம்

கொழும்பு, ஜுன் 25

பரந்தன் இரசாயன நிறுவனத்தின் தலைவராக எஸ். நேசராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு கடந்த 20ஆம் திகதி 4 அரச நிறுவனங்களின் தலைவர்களை நியமித்தது.

இதன்படி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் தலைவராக சோமசிறி ஏக்கநாயக்க, இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத் தாபனத்தின் தலைவராக பீ.ஏ.பி.கே. ஆர். பமுணு ஆராச்சி, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக எம். ஆர். எச். சுவர்ணதிலக, பரந்தன் இரசாயன நிறுவன தலைவராக எஸ். நேசராஜன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

## ஐ.நா. மனித

முன்னதாக, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணி (அரியாலை) மனித புதைகுழிக்கும் நாட்டில் பயணிக்க விரும்பும் சகல பகுதிகளுக்கும் செல்வதற்கு தாம் எந்தவிதமான தடைகளையும் விதிக்கப்போவதில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நல்லிணக்க...

4 நாள் பயணமாக நாட்டுக்கு வருகை தந்துள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் நேற்றைய தினம் வெளிவிவகார அமைச்சரை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பு தொடர்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேசமயம், நேற்றைய தினம் நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்காரவையும் அவரின் அமைச்சில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். (ஐ)

## விழிப்புணர்வு...

புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதிலிருந்து - கடந்த 2024 செப்ரெம்பர் 09ஆம் திகதி முதல் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கைகளில் ஆயிரத்து 253 கிலோ ஹெரோயின், ஆயிரத்து 121 கிலோ ஐஸ் போதைப் பொருள், 12 ஆயிரத்து 491 கிலோ கஞ்சா, 20 ஆயிரம் கிலோ கொக்கைன் சுமார் 10 இலட்சம் போதைமாத்திரைகளை பொலிஸ், இராணுவம், கடற்படை என்பன கைப்பற்றியுள்ளன.

எவ்வளவு போதைப்பொருட்களை கைப்பற்றினாலும் சமூகத்தில் அதன் பாவனை குறைவடையவில்லை. போதைப்பொருளை ஒழிப்பதற்கு கைது செய்தால் மாத்திரம் போதாது, அதன் பாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் பொதுமக்களுக்கும் சிறுவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். எனவேதான், புதிய நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் விபத்துகள், பாலியல் வன்புணர்வுகள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பொதுமக்கள், சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவுள்ளனர் - என்று அரச தகவல் திணைக்களத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார். (ஐ)

## செம்மணி...

இதனிடையே, மனித சங்கிலி பேரணி நீளும் வழியில் தியாகி திலீபனின் நினைவிடத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்படும். இதேபோன்று, தமிழாராய்ச்சி படுகொலை நினைவிடம், யாழ். நூலகம், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுச்சதுக்கம் ஆகிய இடங்களிலும் சுடர் ஏற்றப்படும். அதன்பின்னர், அணையா விளக்கு காற்றுடனும் நீருடனும் கலக்கப்படும்.

மேலும், இன்றைய தினம் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு அனைவரின் ஆதரவையும் ஏற்பாட்டுக் குழுவான மக்கள் செயல் குழு கேட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

### இலங்கைக் கடலில் ஆய்வு செய்ய

## உணவு விவசாய அமைப்பின் ஆராய்ச்சி கப்பலுக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 25

இலங்கை கடல் பகுதியில் ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் தொடங்க உணவு விவசாய அமைப்பின் ஆராய்ச்சி கப்பலுக்கு இலங்கை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தக் கப்பல் ஓகஸ்ட் 15 முதல் 20 வரை கடல் பகுதியில் ஆராய்ச்சி நடத்தவுள்ளதாகக் கூறப்படுகிறது.

மீன்வள அமைச்சால் கோரப்பட்டு, ஐ.நாவால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தக் கப்பலின் பயன்பாடு, காலநிலை தொடர்பான நிரலாக்கத்தை ஆதரிப்பதற்கும், முக்கியமான கடல்சார் தரவுகளை வழங்குவதற்கும் நோக்கமாக உள்ளது.

வெளிநாட்டு ஆராய்ச்சி கப்பல்களுக்கான ஒரு வருட தடைக்காலம் டிசெம்பர் 2024 இல் காலாவதியானது. அப்போதிருந்து, அரசாங்கம் புதிய தரநிலை இயக்க நடைமுறைகளை வரைவதற்கு அமைச்சுக்களுக்கு இடையேயான குழுவை நியமித்து, ஒப்புதல்களை தாமதப்படுத்தியுள்ளது.

இந்த ரத்து இலங்கைக்கு மில்லியனுக்கும் அதிகமான ஆதரவை இழக்க நேரிடும் என்றும், எதிர்கால பசுமை காலநிலை நிதி முயற்சிகளைப் பாதிக்கலாம் என்றும் ஐ.நா அதிகாரிகள் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மத்திய கிழக்கு மோதலால் இங்கு பொருளாதார மந்தநிலை ஏற்படும்

### பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 25

**உலக சந்தையில் எரிபொருள் விலையுடன் இலங்கையின் எரிபொருள் விலையை சமநிலைப்படுத்தவேண்டிய கட்டாயம் காணப்படுகிறது. இவ்வாறான நிலைமைகளால் இலங்கையில் பொருளாதார மந்த நிலைமை ஏற்படக்கூடிய அபாயமும் காணப்படுகிறது. எனவே பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய பொருளாதார மறுசீரமைப்புக்களை முன்னெடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும் என பொருளாதார ஆய்வாளர் தயநாத் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தற்போது சுமார் நான்கரை பில்லியன் டொலர் எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படுகிறது. மத்திய கிழக்கு மோதலால் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தால், எமக்கும் இறக்குமதி செலவு அதிகரிக்கும். எனவே மாத இறுதியில் எரிபொருள் விலைகள் சடுதியாக அதிகரிக்கக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

அத்தோடு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தே எமக்கு அதிகளவான அந்நிய செலாவணியும் கிடைக்கின்றது. 2024 முதல் காலாண்டில் இஸ்ரேலிலிருந்து 20-25 மில்லியன் டொலர் அந்நிய செலாவணி கிடைத்துள்ளது.

வருடத்துக்கு சுமார் 100 மில்லியன் டொலர் இஸ்ரேலிலிருந்து மாத்திரம் கிடைக்கப் பெறுகின்றது. இவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து கிடைக்கும் அந்நிய செலாவணியில் ஸ்திரமற்ற நிலைமை ஏற்படக் கூடும்.

அமெரிக்காவின் தலையீட்டுடன் இந்த பூகோள மோதல் நிலைமைகளில் இலங்கையும் பாதிக்கப்படக் கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. இலங்கையின் ஏற்றுமதிகளில் அமெரிக்கா முன்னிலை வகிக்கிறது.

அதனையடுத்து ஐரோப்பிய பிராந்தியம் மற்றும் சீனா என்பன காணப்படுகின்றன. எனவே தான் இந்த மோதல்கள் இலங்கையில் நேரடிய தாக்கத்தை செலுத்தும் எனக் குறிப்பிடுகின்றோம்.

ஈரானுக்கு பெருமளவில் தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதிலும் பாதிப்பு ஏற்படக் கூடிய அபாயமும் நிலவுகிறது. இஸ்ரேலுக்கும் குறிப்பிட்டளவு உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுவதோடு, இறக்குமதிகளும் உள்ளன.

இவ்வாறு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

உலக சந்தையில் எரிபொருள் விலையுடன் இலங்கையின் எரிபொருள் விலையை சமநிலைப்படுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது.

எரிபொருள் விலை சமநிலைப்படுத்தப்படாவிட்டால் பின்நாட்களில் ஏனைய விளைவுகள் ஏற்படக் கூடிய ஆபத்தும் காணப்படுகிறது. அத்தோடு இராஜதந்திர ரீதியிலும் திட்டமிடல்களை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக இவ்வாறான நிலைமைகளால் இலங்கையில் பொருளாதார மந்த நிலைமை ஏற்படக் கூடிய அபாயமும் காணப்படுகிறது. 2028இல் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படக் கூடும்.

எனவே பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய பொருளாதார மறுசீரமைப்புக்களை முன்னெடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். எவ்வாறிருப்பினும் இறக்குமதி கட்டுப்பாடுகள் இதற்கு பொறுத்தமான தீர்வாக அமையாது.

ஆனால் உலக சந்தையில் எரிபொருள் விலையுடன் இலங்கையில் எரிபொருள் விலை சமநிலைப்படுத்தப்பட்டால், இறக்குமதிகள் இயல்பாகவே மட்டுப்படும். விலைகள் உயர்வடையும் போது அவற்றின் பாவனைகளும் படிபடிப்படியாகக் குறைவடையும்.

எரிபொருள் விலை அதிகரிக்கும் பட்சத்தில் ஏனைய இறக்குமதிகளுக்கான செலவினையும், எரிபொருள் இறக்குமதியில் உள்ளடக்கவேண்டும்.

இவ்வாறான நிலைமையில் முறையான நிதி முகாமைத்துவம் இல்லாவிட்டால் அந்நிய செலாவணி இருப்பிலும் அது தாக்கம் செலுத்தக் கூடிய வாய்ப்புள்ளது. அதனை விடுத்து நேரடியாக இறக்குமதிகளால் அந்நிய செலாவணி இருப்பிற்கு பாதிப்பு ஏற்படாது- என்றார். (அ)

## குடும்பஸ்தரின் கண்ணுக்குள் மிளகாய்த்தூள் வீசி தாக்குதல்!

### கட்டுடைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடை பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மீது கூரிய ஆயுதத்தால் நேற்று முன் தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


குறித்த குடும்பஸ்தர் பிள்ளைகளை பாடசாலையில் விட்டுவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் முகங்களை மறைத்தவாறு வந்த இருவர் குறித்த குடும்பஸ்தரின் கண்களுக்குள் மிளகாய் தூளை வீசினர்.

அதன் பின்னர் அவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

படுகாயமடைந்த குறித்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## அரிசிக்கு தட்டுப்பாடு!



கொழும்பு, ஜூன் 25

சந்தையில் சம்பா, கீரி சம்பா மற்றும் சிவப்பு பச்சை அரிசி ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்பொருள் அங்காடிகள் பலவற்றில் சம்பா மற்றும் கீரி சம்பா ஆகிய அரிசிகள் கிடைக்காததால் நுகர்வோர் கடும் சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றனர்.

சிறு அரிசி ஆலைகளினால் சந்தைக்கு கிடைக்கப்பெறும் அரிசியின் இருப்பு தீர்ந்துவிட்டதால் இவ்வாறான பற்றக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பாரியளவிலான அரிசி ஆலைகளை வைத்திருக்கும் வியாபாரிகளிடம் இருந்து கடந்த நாட்களில் சந்தைக்கு குறைந்தளவிலான அரிசியே கிடைக்கப்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சிறிய அளவிலான அரிசி வியாபாரிகள் சந்தைக்கு வெளியிடும் அரிசி இருப்பு தீர்ந்ததால், பெரிய அளவிலான அரிசி வியாபாரிகள் சந்தையில் அரிசி விலையை அதிகரிக்க தயாராகி வருவதாகவும் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## மின் மற்றும் இலத்திரனியல் கழிவு சேகரிப்பு வாரம் கிளிநொச்சியில்!



கிளிநொச்சி, ஜூன் 25

மின் மற்றும் இலத்திரனியல் கழிவு சேகரிப்பு வாரம் - 2025, கிளிநொச்சி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடக்கு மாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு கரைச்சி பிரதேச சபையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். “சுற்றாடல் எம்மைக் காக்கும் நாம் சுற்றாடலைக் காப்போம்“ எனும் தொனிப்பொருளில் நேற்று முன் தினம் முதல் வரும் 27ஆம் திகதி வரை மின் மற்றும் இலத்திரனியல் கழிவு சேகரிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வட மாகாண பணிப்பாளரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்தின் உள்ளூராட்சி உதவியாளர் எஸ்.மணிமேகலை, கரைச்சி பிரதேச சபை செயலாளர் த.ஞானராஜ் மற்றும் துறை சார்ந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

## 2025ஆம் ஆண்டில் டெங்கு காய்ச்சலால் 15 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 25

டெங்கு காய்ச்சல் காரணமாக இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 15 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதே காலப்பகுதியில் நாடு முழுவதும் மொத்தம் 27,702 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது வாரத்துக்கு சராசரியாக 1,300 டெங்கு நோயாளர்கள் பதிவாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் டெங்கு பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அதிகாரிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 05 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு பிரச்சாரத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த திட்டம் 16 மாவட்டங்களில் உள்ள 101 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கும். (அ)

## இவ்வாண்டில் இதுவரை 52 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, ஜூன் 25

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இதுவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 52 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 30 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகளவிலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலக கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.